3597



# செந்தமிழ்


| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு கக௯௯அ-ஆவணி | பகுதி |
|---|---|---|
| சூ௩ 63 | 1967—செப்டம்பர் | ௫ |


## அறிவர் சித்தர்

—*—


பண்டித வித்துவான் மு. இராமலிங்கம், பி. ஏ.,
க. செ. கல்லூரி, மேலைச்சிவபுரி


அறிவர் சித்தர். சித்த மார்க்கம் அறிவர் நெறி: "நெறியின் ஆற்றிய அறிவன்" என்பர்

சித்த வைத்தியம் அறிவர் மருத்துவம். "வேர் பாரு, தழை பாரு, மிஞ்சியக் கால் கற்பசெந்தூரம் பாரே" என்பர். இது அடிப்படைஉண்மை.

மது அடிப்படையினது ஆயுர்வேத வைத்தியம்; இறைச்சி (ஊன்) அடிப்படையினது யுனானிவைத்தியம். அல்

லாப்பதிக்கு இரசாயனம் அடிப்படை; ஓமியோபதிக்கு ஒப்பணு உயிரி ரசாயனம் அடிப்படை. இவ்வனைத்தும் உடையது. தூய்மையாக்க வல்லதே அறிவர் மருத்துவம். இதுவே மருத்துவ மணி முடி. மருந்தும் அமுதம் ஆக அமைவதே அறிவர் நெறி.

கீரையும் கிழங்கும் நோய் வராமல் தடுக்கும்; வரின், தொடக்கத்தில் நீக்கும். முதிரநேரின், ஒப்பணு முதலியன தப்பாமல் பயன் தரும். கற்ப செந்தூரம் இரசாயனமருந்தே. மூளைக் கட்டியும் புளிக்கவைத்தும் வைட்டமின் வளர்த்தல் அறிவர் மருத்துவ நெறியே ஆகும்: இன்று அறிவியல் துறையில் வளர்ந்துள்ள பிளாசிடிக்கு அறுவை மருத்துவம் "ஊனுக்கு ஊனை இடு" என்பதால் உணரப்பெறும். குறுகிப்பாங்கு, கண்பாங்கு முதலியன குறிப்பிடத்தக்கன.

எனவே. "எல்லாப் பொருளும் இதன் பாலுள; இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்" என்பது அறிவர் நூலாம் திருக்குறளுக்கும் அறிவர் மருத்துவத்திற்கும் பொருந்தும்.

இப்போது "நெறியின் ஆற்றிய அறிவன்" என்ற தொல்காப்பியர்வாக்கின் பொருள் இனிது விளங்கும். செயலளவால் எதனையும் துணிகிற அறிவர் நெறி இன்றைய அறிவுலக நெறியே அகும் (Opevational appvoach). இதனையே பெருவாழ்வு நூலருளிய பெருநாவலர் "கணை கொடிது; யாழ்கோடு: செவ்விதாங்கன்ன வினைபடுபாலால் கொளல்" என இனிய எளிய மேற்கோள் கொண்டு ஒப்புற விளங்கவைத்துள்ளார்.

யாழ் வளைவுடையது. அதன் இசை இன்பம் தருகிறது அம்பு நேரானது. அதன் செயல் துன்பம் தருகிறது. எனவே உருவு கண்டு எள்ளாமை வேண்டும். செயலால் எதையும் துணிதல் அறிவர் நெறி.

தமிழ் மன்ற நூல் வழிபாட்டு நூல், அறிவர் நூல் இவை முறையே

(1) சங்க நூல் (2) சமய நூல் (3) சித்த நூல் என வழங்குகின்றன தெய்வம் என்பதோர் சித்தம் என்பர் மணிவாசகர்.

பற்றுதல் அறிதல் துணிதல் தெளிதல் என்ற நான்கும் மனம் புத்திஅகங்காரம் சித்தம் என உள்ளுடம்பின் நான்கெல்லைஎன்று கட்டளை நூல் விளக்கும்.

எதனையும் விற்றற்கு விரையும் கயவர் வாழ்வு அறிவர் வாழ்வையும் தாழ்த்திவிட்ட அவல நிலையைக்காண்கிறோம். வணிகமனப்பாங்கு பெருவாழ்வையும் சிறு வாழ்வாக மாற்றி விட்டது. "இம்மைச்செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிகன் ஆய் அல்லன்" என்ற சான்றோர் வாக்கு வழக்கிலிருந்து வெகு தூரம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. காரணம் சான்றின் வழிநின்று "உண்மை, முழுஉண்மை, உண்மை தவிரப்பிறி தொன்றும் இல்லை" என்று காண்பார் அருகிவிட்டனர் என்பதே யன்றிவேறென்ன?

நடுநிலை தவறாமல் உண்மை காண வல்லவர் பெருக வேண்டின் அறிவர் நெறி பெருக வேண்டும்; அறிவர் மருத்துவம் பெருகவேண்டும்; அறிவர் நூல்பெருக வேண்டும். அப்போதே மக்கள் கூட்டத்தை மக்களாக வாழவைக்கும் ஐயர் தலைவர்ஆவர். ஐவியப்பாகும். மக்களை வியப்பில் ஆழ்த்தி உயர்த்தி நயக்கச் செய்யவல்லவரே தலைவர். இவர்களையே ஐயர் என்பது தமிழ்மரவு

தலைவர்களும் தவறநேரின் ஒறுக்க வல்லவர் அறிவர்; அறவோர் மன்னித்து மாண்புற வளர்க்க வல்லவர் அந்தணர். சான்றோர், ஐயர், அறிவர், அறவோர் அந்தணர் என முறைப் படுத்துவர்.

சித்தர் சித்து விளையாடுவோர்; ஞானிகளல்லர் என்பது தவறு என்று திருவருட்பா தெரிவிக்கின்றது.

(1) "சித்தியின் பொருட்டே
முத்தியை அடைவது"

(2) "முத்தி என்பது நிலை
முன்னுறு சாதனம்"

(3) "சித்தி என்பது நிலை
சேர்ந்த அனுபவம்"

(4) "முத்தர் எலாம் போற்றும் அருள்
சித்தர் மகன் நானே"

சித்தர் ஆண்டவர், சித்து விளையாடும் சில்லரையல்லர் முத்தி வீடு எனின் மரணமிலாப் பெருவாழ்வே சித்தி என உணர்த்தல் வேண்டும். இதுவே "வீடும் வேண்டா விற" லாகும்.

பதினெண் கணத்தில் வித்தகச் சித்தர் கணம் ஒன்று. இதனையே "ஒயிட்பிரதர் கூட்" என்பர் ஆங்கிலேயர்; வெண் சிலுவை நூல் நிலையம் ஒன்றும் உண்டு (White cross library White brotherhood).

சித்தர்களில் பலவகையுண்டு. இருவகை குறித்துத் திருவருட்பா நமக்கு விளக்கம் தருகின்றது.

(i) கர்ம சித்தர்; (ii) ஞான சித்தர்;

1. "இதுவரையில் கர்ம சித்தருடைய காலம். அதனால் சமயங்களும் மதங்களும் பரவியிருந்தன.

2. "இப்போது வரப்போகிறது ஞானசித்தருடைய காலம். இனி சாதிசமயம் முதலான ஆசாரங்கள் எல்லாம் போய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான ஆசாரம் ஒன்றே விளங்கும்.

3. "இப்போதிருக்கும் வேதாகமபுராணங்களிலும் சமய மதங்களிலும் இலட்சியம் வையாதீர்கள். வைய்தால் சமரசசுத்த சன்மார்க்கத்தில் உங்களுக்கும் லட்சியம் வராது. வராவிட்டால் நீங்கள் அடையப்போகிறது ஒன்றுமில்லை.

4. "சர்வ சித்தியையுடைய கடவுள் ஒருவரே. அவரை உண்மையன்பால் வழிபாடு செய்யவேண்டும்.

5. அதற்குரிய சாதனம் இரண்டு.

(i) பர உபகாரம்; (ii) சத்விசாரம்.

6. "இந்த மார்க்கத்தால்தான் சுத்த தேகம் பெற வேண்டும்".

இதைவிளக்கும் சாத்திரம் திருமந்திரமே; தோத்திரம் திருவாசகமே என்பார்கள் வள்ளல் பெருமான் அவர்கள். "சமரச

சுத்த சன்மார்க்க சத்திய ஞானசாரம், சுத்த தேகம்'' என்ற விண்ணப்பம் மேற்குறித்த விளக்கம் தருகின்றது. இது வடலூர் ஆண்டவர் ஒளியுடம்பு பெற்ற 1874க்கு முன் அருளப் பெற்றது.

சித்தர் என்ற பெயர் அறுவர் பெயருடன் இணைந்துள்ளது.

1. அகப் பேய்ச்சித்தர் 2. குதம்பைச்சித்தர் 3. கடு வெளிச்சித்தர் 4. அழுகணிச்சித்தர் 5. இடைக்காட்டுச்சித்தர் 6. பாம்பாட்டிச்சித்தர்

இவ்வறுவரும் பதினெண் சித்தரில் அடங்குவரா? ஏனைய பன்னிருவர் யார்யார்? என்ற வினாக்களுக்கு முரணின்றி வரலாற்று அடிப்படையில் விடைகிடைக்கவில்லை. எனினும் சிவ வாக்கியர், திருமூலர், கொங்கணர், அண்டர், திருவள்ளுவர், வள்ளலார், பட்டினத்தார், பீர்முகமது சட்டைமுனி, அகத்தியர், போகர், சூரியானந்தர் பெயர்களைக் குறிக்கின்றனர்.

தாயுமானவர் பாடும் வித்தகச் சித்தர் கண இயல் புணர வேண்டும். ''தவலரும் தொல் கேள்வித்தன்மையுடையார் இகலிலர்; எஃகுடையார் தம்முள் குழீஇ நகலின் இனிதாயின் காண்பாம் அகல் வானத்து உம்பர் உறைவார்பதி'' என்றும் ''அலகுசால் கற்பின் அறிவுநூல்'' என்றும் நாலடியார் கூறு வதும் நன்குணர வேண்டும்.

அமரர் உலகினும் சிறந்தது அறிவர் உலகம். ''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என்பர் வள்ளுவர். அவரே ''தேவர் அனையர் கயவர்'' என்றும் நகைப்பர். தேவர் தலைவனுக்கு விழா எடுத்தல் இந்திரவிழவூரெடுத்த காதை எத்தகையது என்று இதன் துணைகொண்டு உணரவேண்டும்.

''ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே இது
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கு ஊத்தையில்லை — இதைப்
பார்த்துக்கோ உன் தன் உடலுக்குள்ளே''

என்கிறது கொங்கணர் வாலைக்கும்மி.

யாக்கை நிலையாமை பேசும் சம்பிரதாயம் இந்த அறிவர் மரபால் அடிபடுகிறது: நிலையாமை மட்டும் குறிப்பது பயனற்றது; நிலைபேறு எய்த வழிகாட்டுவதே அறிவர்நெறி, அதுவே காஞ்சித்திணையின் குறிக்கோள்.

"நில்லா உலகம் புல்லிய நெறித்து"
"நிகழ்ந்தது நினைத்தற்கேதுவுமாகும்"
"நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே"

இவற்றின் விளக்கமும் இனிப் பெருவாழ்வு பற்றி அறிவர் கூறும் செய்திகளையும் தொகுத்து முறைப்படுத்தி உணர்ந்துய்யமுயல்வோம்.

# கலித்தொகை, பரிபாடல்களின் வினைவடிவ வேறுபாடுகள்

மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றில் கலித்தொகை, பரிபாடல்களுக்கும் ஏனைய நூற்களுக்கும் சொற்களின் அமைப்பில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. கலித்தொகையும் பரிபாடலும் ஏனைய நூல்களினும் காலத்தால் பிற்பட்டுத் தோன்றியவை என்ற கருத்திற்குச் சான்றுகளாக இவ்வேறுபாடுகள் காட்டப்பட்டு வருகின்றன. காலவேறுபாடு அன்றி, வேறிரண்டு காரணங்கள் இக் கட்டுரையில் சுட்டப்படுகின்றன.

## 1. பொதுவழக்குச் சொற்கள் பயின்று வருதல்

ஆன், ஆள், ஆர், ஆய் ஈற்று வினைச்சொற்கள் உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் பொதுவாக அமைந்தவை என்பதையும், அவ்விதிகளின் ஆ ஓவாகத்திரிந்த ஓன், ஓள், ஓர் ஓய், ஈற்று வடிவங்கள் செய்யுளுக்கே உரியன என்பதையும்,

> "பாலறி மரபின் அம்மூ ஈற்றும்
> ஆ ஓ ஆகும் செய்யு ளுள்ளே"
> "ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்"

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் தெரிவிக்கின்றன.

சங்க நூல்கள் எல்லாவற்றிலும் காணப்படும் ஆன் ஈற்று உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்று சான்றுகள் கலித்தொகை, பரிபாடல்களிலேயே அமைந்து விடுகின்றன. ஆனால் இவ்வகை ஓன் ஈற்றுச் சொற்களில் நூற்றுக்கு ஒன்பதே கலித்தொகை, பரிபாடலில் இடம் பெறுகின்றன. இவ்வாறே 'ஆள்' ஈற்றுச் சொற்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்றும், ஆ, ஓவாகத்திரிந்த

சொற்களில் நூற்றுக்கு ஐந்தும் கலித்தொகை, பரிபாடல்களில் காணப்படுகின்றன. ஆர் ஈற்று வடிவங்களில் தொண்ணூற்றைந்து விழுக்காடும், ஓர் ஈற்று வினைச்சொற்களில் பதினைந்து விழுக்காடும் இந்நூல்களில் இடம் பெறுகின்றன. இதைப்போல ஆய் ஈற்று வினை வடிவங்களில் எண்பத்து நான்கு விழுக்காடும் ஓய் ஈற்று வடிவங்களில் முப்பது விழுக்காடும் கலித்தொகை பரிபாடல்களில் காணப்படுகின்றன.

கலித்தொகை, பரிபாடல்கள் உலகவழக்குச் சொற்களை மிகுதியாகப் பயன் படுத்துகின்றன என்பதற்கு இன்னொரு சான்றையும் இங்குக்காண்போம் சிறந்தவன், சிறந்தவள், சிறந்தவர்போன்று அவன், அவள், அவர் ஆகிய ஈற்றுச்சொற்கள் கலித்தொகை, பரிபாடல்களில் பெரும்பான்மை பயன் படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் முழுவதிலும் காணப்படுகின்ற இவ்வீற்று ஆண்பாற் சொற்களில் நான்கு விழுக்காடே ஏனைய நூல்களில் இடம் பெறுகின்றன. பெண்பாற்சொற்களில் பதினைந்து விழுக்காடும், பலர் பாற் சொற்களில் இருபத்திரண்டு விழுக்காடும் ஏனைய நூல்களில் காணப்படுகின்றன. கலித்தொகை பரிபாடல்கள் உலகவழக்குச் சொற்களை ஏனைய சங்க நூல்களினும் மிகுதியாகப் பயன்படுத்துதல், அவைகளின் வினைச் சொல்வடிவ வேறுபாட்டிற்கு ஒரு காரணம் என்பதை மேற் கூறிய சான்றுகள் ஆதரிக்கின்றன.

## 2. கலியோசையும் வெள்ளோசையும்

கலித்தொகை, பரிபாடல்கள் ஒழிந்த ஏனைய நூல்கள் அருகி அமைந்த வஞ்சி ஓசையோடு பெரிதும் அகவலோசையால் நடப்பவை. அகவலோசைக்கு மூவசைச்சீர் அருகிவருதல் அமைதியுடைத்தாயினும் பெருகிவருதல் இல்லை. எடுத்துக் காட்டாகப் பொருநராற்றுப் படையில் அமைந்த 991 சீர்களில் இருபத்தெட்டுச் சீர்களே பிற்கால யாப்பின்படி மூவசைச்சீர் என்று எண்ணத்தகுவன. அவற்றுள் இருபத்தாறு சீர்கள் நேர்பு, நிரைபு கொண்டு ஈரசைச்சீர்கள் ஆகின்றன. எஞ்சிய இரண்டில், கடவுட்கடன் (52) என்பதைக்

"குற்றிய லுகரமும் குற்றிய லிகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்பவும் பெறுமே

என்னும் தொல்காப்பிய விதியால் நிரைபு நிரை எனக் கொள்ளலாம் என்றாலும், "ஒற்றுவருமொழி வல்லெழுத்துமிகினே ஆவதன்றி, நிலைமொழி ஒற்று உடையவாயின் நேர்பும் நிரைபும் ஆகா" என்ற பேராசிரியர் உரை அவ்வாறு கொள்வதை அனுமதிக்கவில்லை. ஏனைய பொழுதிற்றம் என்பது புளிமாங்காய். எனவே 991 சீர்கள் கொண்ட பொருநராற்றுப் படையில் இரண்டே மூவசைச் சீர்கள் காணப்படுகின்றன.

ஏனைய நூற்களில் இவ்வாறு காணப்படும் மூவசைச்சீர் வடிவமுள்ள வினைச்சொற்களை மூன்று வகையாகப்பிரிக்கலாம். ஆகின்று, உயர்கின்று, ஓடின்று முதலிய நேர்பு அசையில் முடிவனவும் அஞ்சியது, ஆடியது, நண்ணியது முதலிய நிரைபு அசையில் முடிவனவும், அமையாது, அறியாது, உண்ணுது முதலிய நேர்பு அசையில் முடிவனவும் ஒருவகையைச்சார்ந்தவை இன்னொருவகை மூவகைச்சீர் வினைச் சொற்கள் அகவலோசைகாக வகையுளியாக வருபவை. எடுத்துக்காட்டாக.

வருந்தினள் அளியள் நீ பிரிந்திஎ ளேனே
தாயோம்பு ஆய்நலம் வேண்டா தோளே
செல்லா யோநின் முள்ளெயி றுண்கென
செல்லா திமோ என்றனள் யாயே

ஆகிய அடிகளில் பிரிந்திசினேள், வேண்டாதோள், செல்லாயோ செல்லாதிமோ என்பன பிரிக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. மூன்றும்வகை மூவகைச் சீர்ச்சொற்கள் அவ்வாறே பிரிக்கப்படாது பயன்படுத்தப்படுவன, உதாரணமாக

வாரற்க தில்ல தோழி சாரல்

என்ற அடியில் வாரற்க என்பது ஒரு சீராகவே நிற்கின்றது. மேற்கூறிய சான்றுகள் அகவலோசையில் மூவசைச்சீர்கள் அருகி வரும் என்பதை நன்கு விளக்குகின்றன.

ஆனல் கலி, பரிபாட்டு ஆகியவை அகவலோசையோடு அகவலுக்கில்லாதகலியோசையும்வெள்ளோசையும் பயின்றுவரும் இயல்புடையன. பரி பாடலும் ஒரு வகைக் கொச்சகக் கலியே. இவற்றுள் வெள்ளோசை பயின்றுவரும் என்பதை

நெடுவெண் பாட்டே, குறுவெண் பாட்டே
கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுளோடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும், இவையெல்லாம் வெண்பா என்னும் உறுப்பினுனே வகுப்படும் என்ற பேராசிரியர் உரையாலும் உணரலாம். துள்ளலோசைக்கும் செப்பலோசைக்கும் இன்றியமையாதனவாகிய கலித்தளைக்கும் வெண்சீர் வெண்டளைக்கும் காய்ச்சீர் இடம் ஆதலால் கலித்தொகை பரிபாடல்களில் மூவசைச்சீர் அமைப்புடைய சொற்கள் பயின்று வருதல் இயற்கை. அவற்றுள் வினைச்சொற்களில் நான்குவகைகளை இங்குக் காண்போம்.

## 1. செய்யாதி என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள்

உரையாதி, அஞ்சாதி, அழியாதி, ஒவ்வாதி, ஓராதி முதலிய சொற்கள் கலித்தொகை ஒழிந்த நூல்களில் எனக்குத் தெரிந்தவரை காணப்படவில்லை கலித்தொகையில் இவை தனிச்சீராகப் பயன்பட்டுக் கலித்தளையும் வெண்டளையும் தோன்றுதற்குக்காரணமாக அமைவதைப்

"பிரிகுவ ரெனப்பெரி தழியாதி திரிபுறீஇ"
"வாளாதி வயங்கிழாய் வருந்துவ ளிவளென"
"ஆயிழா யாங்ஙன முரையாதி சேயார்க்கு"
"பெருமான் பரத்தமை ஒவ்வாதி யென்றுள்"

முதலிய சான்றுகள் காட்டுகின்றன.

## 2. மின்னீற்று எதிர்மறை வினைமுற்றுக்கள்

மின் ஈற்று எதிர் மறைச் சொற்களில்,

'எப்பொருள் பெறினும் பிரியன்மி னோவென"
என்ற அகநானூற்று அடியிலும்,

"ஐயங் கொள்ளன்மி னாரறி வாளிர்"

என்ற புறநானூற்று அடியிலும் காணப்படும் இரண்டைத்தவிர ஏனைய எல்லாம் கலித்தொகை, பரிபாடல்களிலேயே காணப்படு கின்றன. அவை தனிச்சீராகவந்து வெண்டளையும் கலித்தளையும் தோன்றுதற்குஇடமாகஅமைவதைக்கீழ்வரும் சில சான்றுகளால் உணரலாம்.

"என்னையேமூசிக் கதுமென நோக்கன்மின் வந்து" (கலி 147-17)
"வினவன்மின் ஊரவிர் என்னையெஞ் ஞான்றும்" ( ,, 147-53)
"கேளலன் நமக்கவன் குறுகன்மின் எனமற்றென்" ( ,, 68-10
"கூடிப் புணர்ந்திர் பிரியன்மின் நீடி" ( ,, 92-196)

## 3. மல்லீற்று வினையெச்சம்

சங்க நூல்களில் 16மல்லீற்று வினையெச்சங்கள் காணப்படு கின்றன. அவற்றுள் 13 கலித்தொகையிலும், 2 பரிபாடலிலும் அமைகின்றன. எஞ்சியஒன்று

'கா அய்க் கொண்டநும் இயம்தொய் படாமல்' என்ற மலைபடுகடாத்தில் காணப்படும் ஈரசைச்சீர்ச்சொல். கொளுத்தா மல், உரையாமல், கூறுமல், தீராமல், போகாமல் முதலியவை தனிச்சீராக நின்று வெண்டளையும் கலித்தளையும் தோன்ற இன்மாக அமைகின்றன.

## 4. காலீற்றுச்சொற்கள்

அளித்தக்கால், ஆடுங்கால் போன்ற வினையெச்சங் களுக்குச்சங்க நூல்கள் முழுவதிலும் 105 சான்றுகள் காணப்படு கின்றன. அவற்றுள் 90 கலித்தொகை, பரிபாடல்களில் இடம் பெறுகின்றன. படுங்கால் என்னும் ஈரசைச் சொல்லைத்தவிர ஏனைய 14-ம் வகையுளியாகவே ஏனைய இலக்கியங்களில் அமை கின்றன. கலித்தொகை பரிபாடல்களில் பாராட்டாக்கால் என்னும் நான்கசைச்சீர்ச்சொல்லைத்தவிர உள்ள 89 சொற்களில் 12, வெள்ளோசையும் அகவலோசையும் தோற்றுதற்காக வகை யுளியாக அமைகின்றன. ஏனைய 77 சொற்களும் தனிச்சீராக

அமைந்து வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் தோன்று தற்கு இடமாக அமைந்துள்ளன. சில சான்றுகள் வருமாறு.

"பண்டரங்க மாகுங்கால் பணையெழில் மென்றோள்" கலி 1-9.
"நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கா லவைநினக்கு" பரி 4–3.

மேற்கூறிய சான்றுகள், கலித்தொகை, பரிபாடல்களின் வினைவடிவவேறு பாடுகளுக்குக் கலியோசையும் வெள்ளோசையும் காரணமாக அமைகின்றன என்பதைக்காட்டுகின்றன. கவிஞன் தனது பாவின் ஓசைக்கேற்ற அமைப்புடைய சொற்களையே கையாளுதல் இயற்கை என்பதும் இங்குக் கருதத்தக்கது.

# வள்ளுவரும் சமுதாயமும்

திருக்குறள் முக்காலத்திற்கும் எல்லா உலகிற்கும் விழுமிய கருத்துக்களை வழங்கும் பெருமைசான்ற நூல். திருவள்ளுவர் தாம் பட்டறிந்த உண்மைகளையும் உலகியற் பேரறிவின் மேன்மைகளையும் வழக்கோடு உணர்ந்து தெள்ளிய நூலாக இயற்றித் தந்திருக்கின்றார்.

குறளாசிரியர் கூறும் தெள்ளிய நுட்பங்களை உணர்வதற்கு உறுதுணையாக மற்ற ஆசிரியர்களின் நூல்களும் விளங்குகின்றன. என்றாலும், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வாழ்க்கையில் அறிந்தவற்றை நினைத்து, அந்த நினைவின் வழியாகக் குறளை நோக்கிப் பெருமைசான்ற பண்புகளை அறியவேண்டும். அறிந்து "மனத்துக்கண் மாசிலனாதல்" என்ற வண் மொழியையொன்றி வளர்வடையவேண்டும். அதுவே எல்லா அறமும்; மற்ற புறத் தோற்றங்களும் பொருளற்ற செயல்களும் பயனற்றவையே.

> "அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
> மறத்த லினூஉங்கில்லை கேடு" (32)

என்று தெளிவுறுத்தி, அறத்தை மறத்தலே ஆகாது என்று உலகுக்கு உணர்த்திய நூலாசிரியர் திருவள்ளுவர் ஒருவரே. இக் கருத்து மிகவும் மேன்மை வாய்ந்தது. அறத்தை மறந்தாலன்றோ தீமை வந்து புகும்? மறவாதார்க்கு எக்காலத்திலும் தீமையே இல்லையே. அறத்தை மறத்தலே கேடு என்றால் அதனை மறக்கலாமா?

> "உறத்தகும் அரசு இராமற்குஎன்று உவக்கின்ற மனத்தைத்
> துறத்தி நீஎனும் சொற்சுடும் நின்குலத் தொல்லோர்
> மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கன்று
> அறத்தின் ஊங்கினிக் கொடிதெனல் ஆவதொன்றியாதோ"

(கம்பர் – மந்திரப்படலம்)

## சமுதாயம்

திருக்குறள் உலகியல் நூல்; 'உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்' என்று கல்லாடனுர் கூறினர். உலகியல் ஒழுக்கம்விரிந்தபரப்பு உள்ளது; அதனைச் "சமுதாயத்துறை"க்கு ஏற்ப வாழ்வியலாக வள்ளுவர் வகுத்துள்ளார்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (381)

என்று திருக்குறளில் கூறிய ஆறு பிரிவுக்கும், திருவள்ளுவர் ஒழுங்கு முறைப்படி இயல்கள் வகுத்து அமைத்திருக்கின்றார்.

"அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரண் இரண்டு ஒன்றுஒண்கூழ்—இருஇயல்
திண்படை; நட்புப் பதினேழ்; குடிபதின்மூன்று;
எண்பொருள் ஏழாம் இவை.

என்ற வெண்பாவின்படி அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, பொருள் 1, படை 2, நட்பு 17, குடி 13 என்று அமைத்தமை காணலாம். குடியியல்தான் சமுதாய இயல். தமிழகத்துக் குடிகளைப் பற்றியும் உழவுத்தொழில் பற்றியும், பெருமை, மானம், சான்றாண்மை முதலிய பண்புநலங்களைப் பற்றியும், உலகமே வியக்கும் வண்ணம் இயம்பிய திறம் ஊர்ந்து மகிழக்கூடியது. சிறந்த குடிப்பிறப்பின் குணங்களையெல்லாம் தொகுத்துக் கூறுகின்றார்

"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று" (955)

(தொன்றுதொட்டு வருகின்ற குடியில் பிறந்தவர், தாம், பிறர்க்கு வழங்கக்கூடிய பொருள்வளம் பண்டையிற் சுருங்கியவிடத்தும் தம் பண்பிலிருந்து நீங்கார். அத்தகைய பண்புநலன் நிரம்பிய குடியினர் பெருகிய கூட்டமே தமிழகத்து மக்கட் சமுதாயம்.)

## சமுதாயப் பேரவை.

அவர்களிடத்தில் மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை ஆகிய உயர்நலன்கள் செறிந்து நின்றன. பண்டைக்

காலத்தில் எண்பண்பு கொண்ட பேரவை தமிழகத்தில் விளங்கியது. "குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம். வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறுமை, அவாவின்மை ஆகிய பண்பு கொண்டவர்கள் நிரம்பிய பேரவையில் ஒருநாள் இருக்கும் பேறு ஒருபிறவியில் கிடைக்குமென்றால். அதற்காக, இவ்வுலகில் சுழன்று கொண்டு வருகின்ற மக்கட் பிறப்பே பெறுவேனாக" என்று ஆசிரியப் பாலை கூறுகின்றது.

குடிப்பிறப்பாகிய ஆடையுடுத்துப் பாடல்களாகிய மலர் மாலை சூடி, சிறந்த பேரொழுக்கமாகிய அணிகலனையணிந்து, யாவரும் விரும்பும்படி வாய்மையாகிய நீரை வாய்மடுத்துப் பருகி, தூய மனநிலையே காதலின்பமாகக் கொண்டு அந்தத் தூய நிலைமையில் தங்கிக் குற்றமற்ற நடுவுநிலைமை என்ற பெரிய வீட்டில் வாழ்ந்து, நாள்தோறும் அழுக்காறின்மையும் அவாவின்மையுமாகிய இருபெருஞ் செல்வத்தையும் ஒருசேரத்தாமே ஈட்டுகின்ற தோலா நாவின்மேலோர் பேரவைகள் தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இயங்கி வந்திருக்கின்றன.

"குடிப்பிறப்பு உடுத்துப் பனுவல் சூடி
விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையின்
காத லின்பத்துள் தங்கித் திதறு
நடுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்காறு இன்மை அவாஅ இன்மையென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை
உடனமர் இருக்கை ஒருநாட் பெறுமெனின்
பெறுகதில்! அம்ம! யாமே, வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் பூவுப் பொதிந்து
நின்றுழ் நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பஇம்
மலர்தலை உலகத்துக் கோட்டும் பிறப்பே"

என்பது தொல்காப்பியத்தில் வரும் "எட்டுவகை நுதலிய அவை யகம்" என்பதற்குக் காட்டியிருக்கின்ற மேற்கோட்பாடல்.

## தமிழகச் சமுதாயப் பண்பு

அத்தகைய சமுதாயத்தில் மக்கள், மானம் முதலிய பண்பு கொண்டு விளங்கினர். "எந்தக் காலத்திலும் தம் நிலைமையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழா மையும்" ஆகிய மானம் என்ற பண்பு மேலோங்கி நின்றது. வாயில் உள்ள முடிகளில் ஒருமுடி இழந்தாலும், அந்தக் குறைவினைத் தாங்காமல், உடனே உயிரைவிட்டுவிடும் கவரிமானைப்போல் தாமும் உடம்பைப் பொருட்படுத்தாமல் மானத்தை நிலைநாட்டி உயிரை நீக்கிவிடுவர் என்கின்றார்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" (969)

என்பது குறள். அங்ஙனம் இளிவு பொறுது உயிர்நீத்த மானம் உடையவரது புகழ்வடிவினை உலகம் தொழுது போற்றும் என் பதும் நோக்குக.

"இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு" (970)

என்பது மானம் உடையவரின் பெருமையைக் காட்டுகின்றது.

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்" (975)

பெருமையுடையவராகிய சான்றோர்கள், செய்தற்கு அரிய செயல் களை நெறிப்படியே செய்துமுடிப்பவராவார். இத்தகைய சான் றோரைச் சார்ந்தே சமுதாய வாழ்வு மேன்மை பெற்று வளரும்.

"குணநலம் சான்றோர் நலனே, பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று" (982)

சான்றோர்களுக்கு உள்ள நலமாவது அவர்களுடைய அக நல மாகிய பண்பு நலமே. அந்நலம் பிற உறுப்புக்களாகிய எவ்வகை

நலத்துள்ளும் உள்ளது அன்று. இங்ஙனம் குணநலங்கொண்ட சான்றோர் தமக்கு இன்னாதன செய்தவர்க்கும் இனியனவே செய்வர்; செய்யாரேல், அவரது சால்பு என்னத்துக்காகும்.

> "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு" (987)

என்ற மெய் மொழியை ஓதியுணர்ந்து நோக்கவேண்டும். நோக்கிய பின்பன்றோ பண்பு நலன் தோன்றும்?

## பண்பு நலம்

உலகம் போற்றும் பெரும் பண்பு வாய்ந்த தமிழன் பண்பு நலத்தையே பெருஞ்செல்வமாகக் கருதி வந்தான். அதனின் மிக்க தொரு செல்வம் உண்டென்று நினைக்கவில்லை. தமிழும் பண்பும் ஒன்றாக இணைந்து விளங்கும் திருக்குறளில் பண்புடைமை என்ற ஒரு கூறு அமைத்து வள்ளுவப்பெருந்தகை யாவரும் விரும்பும் இயல்பினை எழுதியருளியுள்ளார். பொற்கலத்திற் பெய்துவைத்த பசுவின் பால்போலப் பண்புடையான் பெற்ற செல்வம் நன்மை யான் செயல்களுக்கெல்லாம் பயன்படும். அத்தகைய பண்பு நலத்தை நோக்குவோம்.

> "எண்பதத்தால் எய்தல் எளிதென்ப; யார்மாட்டும்
> பண்புடைமை என்னும் வழக்கு" (991)

என்ற குறள் பண்புடைமையைப் பெறுவதற்கு வழி கூறுகின்றது. அரிய காட்சியும், கடும்போக்கும் உடையவரிடத்து இனிய பண்பு நலம் இயல்பாகவே மறைந்து போய்விடும். தன்னைக் காண்பவர் தாம் விரும்பிய நேரம் எளிதிற்கண்டு குறை தீர்த்துக் கொள்ளும் வண்ணம் எளிய செவ்வியராக இலங்க வேண்டும். அவ்வாறு எல்லோரிடத்திலும் இயல்பாகவே நடந்துகொள்பவர், பெறுதற்கரிய பண்புடைமை என்ற பெருநெறியினைத் தமக்கு உடைமையாக எய்தல் எளிதென்று அறநூலோர் கூறுவர் என்று அருந்திறல் வள்ளுவர் அருளிப்போந்தார்.

பெருமை, சான்றாண்மை ஆகிய பண்புகளில் தாம் வழுவாமல் நின்றொழுகி எல்லோர் இயல்புகளும் அறிந்து இணங்கி

நடத்தலே பண்புடைமையாகும். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று கலித்தொகையில் நெய்தற்கலி பாடிய நல்லந்துவனர் கூறியுள்ளார். பாடு-உலக வொழுக்கம் என்பது கலித்தொகையுரை.

மேற்கூறிய எளிய செவ்வியுடன் அன்புடைமை, உயர்குடிக் குரிய குணம், நீதியோடு நடந்து அறம் புரிதல், நகையாடலுள் ளும் பிறரை இகழாமை, நண்பாற்ருமல் நயமில செய்யும் பகை வரிடத்தும் பண்பாற்றி நடத்தல் முதலியவை பண்புடைமை யாகும்.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு" (992)

"நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு" (994)

"நகையுள்ளும் இன்னது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு' (995)

"நண்பாற்ருர் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ருர் ஆதல் கடை" (998)

என்ற குறள்கள் உயரிய பண்புடைமையை இனிதாக விளக்கு கின்றன. அன்பொடு பண்பும், நெறியொடு அறமும், நகையொடு இனிமையும், கடமையாகக் கொள்ளவேண்டும் என்பதும், பகைமை பாராட்டுவாரிடத்தும் பண்பு பாராட்டவே வேண்டு மென்பதும் எவ்வளவு உயர்ந்த கருத்துக்கள். நண்பு செய்யான் நயமில செய்வான் அவ்வியல்பினனுக்கும் பண்பு செயல் வேண் டும் செய்யானேல் அவன் மக்கட் பண்பில்லாத கடையனேயா வான்.

பண்புநகை தோற்றப் பழகுந்தன்மை இல்லாதவர்க்கு இந் தப் பேருலகம், பகலிலும் இருண்ட காட்சியையே வழங்கும். உலகியல் அவர்க்கு மறைந்து நிற்கும்.

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்" (999)

என்ற குறள் வாழ்வுக்கு வனப்புக் கொடுக்கின்றது,

உலகியல் ஒழுக்கம் பண்புடையாரைச் சார்ந்தே (தொன்று தொட்டு) இயங்கிக் கொண்டு வருகின்றது. அவர் இல்லை என்ருல் அந்தவொழுக்கம் மண்ணிலே புகுந்து மாய்ந்திருக்குமே. மாயாமல் இருப்பதற்குக் காரணம் பண்புடையாரல்லரோ?

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் (996)

உலகியல் எந்தக் காலத்திலோ மாய்ந்திருக்குமே. பண்புடையார் இருக்கின்ற காரணத்தினலன்ருே அவரைச் சார்ந்து ஒடுங்காமல் ஒழுகிக் கொண்டிருக்கின்றது?

பண்பால் ஒத்திருப்பதே மக்கள் ஒப்பு; உறுப்புக்களால் ஒத்திருக்கும் ஒப்பு ஒப்பாகாது; பண்புதான் மக்களாக்கும். பண்பு நலத்திலும் சிறந்த நலம் வேறு எதுவுமில்லை.

"உறுப்பொத்தல் மக்களொப் பன்ருல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதாம் ஒப்பு" (993)

பண்பு செறிந்த மக்களே மக்கள் என்பது கருத்து. அந்த மக்கட் பண்பு இல்லாதவர், எதிர்த்தாரை வெல்லும் கூர்ந்த அறிவு மிக்கவராய் இருந்தாலும், மாக்களிலும் இழிந்த ஓரறிவுடைய மரத்தையே போன்றவராவர்!

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர் (997)

அவன் பெற்ற செல்வமும் பிறர்க்குப் பயன்படாது. தீய கலத்தில் வைத்த பால் திரைந்து போகுமே;

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று" (1000)

என்ருர் பெரியார். பாலுங்கெட்டுத் தயிருங்கெட்டுப் பண்பில்லாமல் போவதுபோல் பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வமும் பல நலமுங் கெட்டுச் சீரழிந்து போகும்.

## மக்கட் பேறு.

முறையான சமுதாயத்தில் பெருமைசான்ற மக்கள் தோன்று

வார்கள். நலம் பிறங்கிய அக்குழந்தைகளைப் பெற்றவர்கள் ஏழேழ் பிறப்பிலும் அல்லலின்றி வாழ்வார்கள்.

"எழுபுறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" (62)

என்றார்.

## ஒப்புரவு செய்தல்.

ஒப்புரவு என்பது ஒப்புக்கொண்ட செயல் என்று பொருள் தரும். அது பண்புள்ள சான்றோர்கள் ஒப்புக்கொண்ட செயல் என்ற கருத்தினை உட்கொண்டு நிற்கின்றது. "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" என்பதில் 'ஒத்தது' என்பது "பண்பு ஒத்த செயல்" என்ற பொருள் தருகின்றது. அதுவே உலகநடை எனப் பெறும். அதனையறிந்து செய்கின்றவன் பேரறிவாளனாக இருப்பான். அவன் செல்வம் ஊருணி நீர்போல் எல்லோர்க்கும் பயன் படும். எங்கெங்கோ பெய்த நீர் அங்கங்கே நிற்க மாட்டாமல் ஓடி வந்து பள்ளத்தில் பெருகி நிற்கின்றது. தான் பெய்த இடத்தைக் குளிர்வித்துச் செலுமையாக்கிவிட்டே வருகின்றது. அதுபோல் ஒப்புரவாளனால் வரும் செல்வமும் பண்பு செய்து கொண்டே வரும். ஊருணி, போதியதண்ணீர் நிரம்பும் அளவிற்குத் தாழ்ந்து இருத்தல் போல, அறிஞனும் பண்புடையவனாகவும் பணிவுடையவனுமாகவே விளங்குவான். அந்தத் தண்ணீரை எந்த நேரத்திலும் யார்வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். அதுபோல அறிஞன் செல்வமும் பயன்படும். ஊருணிக்கு எல்லோரும் காவல். உண்ணும் நீர் வேண்டிய அளவே முகந்து கொள்வர். அறிஞர் செல்வத்தையும் அளவுக்குமேல் வாங்கநினையார். ஆகவே பணிவு, ஈகை ஒப்புரவு ஆகிய செயல்களே சமுதாயத்தை வளர்க்கும் சான்றோர்க்கு விளங்கிய பண்பு நலன்கள் எனலாம். அவர்கள் ஊருணிநீர் போலவும் உள்ளூரிற் பழுத்த பயன்மரம் போலவும், தப்பாத மருந்துமரம் போலவும் பயன்படுவர். தின்னப் பழமும் குடிக்க நீரும் நோய்க்கு மருந்தும் உதவுகின்ற ஊர்நடுவே பழுத்த பயன்மரமும், ஊருணியும் மருந்துமரமும் போலப் பேரறிஞராகவும் நயமுடையவராகவும் பெருந்தகையினராகவும் விளங்கினர். இப்படிப் பெருங்குணமும் ஒருசேர இயைந்த நல்லோர்களே நாட்

டையும் மக்கட் சமுதாயத்தையும் கைம்மாறு கருதாமல் பொழி கின்ற கார் போன்று உலக நடைகளைச் செய்து வளர்க்கின்றார்கள்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு" (215)

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்" (216)

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்" (217)

என்றார்.

"ஊருணி நிறையவும் உதவும் மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்நதி
வார்புனல் பெருக்கவும் மறுக்கின் றார்கள்யார்?" (கம்பர்)

என்ற பாடலில் கம்பர் உயர்ந்த பண்பு நலன்களைத் திரட்டிக் கூறியிருக்கின்றார். ஆகவே சமுதாய வளர்ச்சிக்கு இங்ஙனம் பாடு படவேண்டும்.

## தொழில்

கழனி பாய்நதி வார்புனல் பெருக்கவேண்டும். உழவுத் தொழில் செவ்வையாய் நடக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். உழவர் கை மடங்கினால் துறவிகளுக்குங் கூட வாழ்வில்லை.

"உழவினார் கைம்மடங்கின் இல்லை, விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை" (1036)

என்பது குறள். உழவர்க்கு உதவி செய்து உழவுத் தொழிலை வளர்த்தால் அவர்கள் பலவேந்தர்களின் குடை நிழலில் அடங்கிய நாடுகளையெல்லாம் தம் வேந்தன் குடை நிழலுக்குக் கொண்டு வந்து காண்பர்.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்" (1034)

என்பது புயிர்த் தொழிலின் உயர்வினைக் காட்டுகின்றது. அத்தகைய தொழில் செய்தும் வணிகம் புரிந்தும் அரிய நூல்களைக் கற்றும் மக்களை வாழச் செய்ய வேண்டுமாதலால் வணிகத்தின் இயல்பும் கல்வியும் சிறப்பும் எடுத்தோதினுர்.

மேற்கூறிய சிறப்பும் மேன்மையும் உள்ள சமுதாயத்தில் இல்லற வாழ்க்கை சிறந்து விளங்குவதாயிற்று.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்ருர். மற்ற இல்லறத்தார்க்கு உதவுதலும், அந்தணரைப் பேணுதலும், துறவிகளை எதிர்கொண்டு போற்றுதலுமாகிய மூவகைச் செயலும் இல்லறத்தார் செய்யவேண்டும்.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று கண்ணகி கூற்ருகக்கூறும் இளங்கோவடிகள் இயல்புடைய மூவர் அறவோரும் அந்தணரும் துறவோரும் என்று புலப்பட வைத்துள்ளார்.

இவர்க்கேயன்றி உற்ருரால் விடப்பட்டவருக்கும் (அனுதைகளுக்கும்) வறியவருக்கும் துணையின்றி யிறந்தவருக்கும் இல்வாழ்வானே துணை என்க. அவன் மேலும் தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் என்ற ஐவகை நெறியிலும் பேணுதலாகச் செய்யவேண்டுவன செய்யும் கடமையுள்ளவனுக ஆகின்ருன். பொருள் தேடுங்கால், பழிபாவங்களுக்கு அஞ்சி அறநெறியில் பொருள்தேடிப் பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்பும் வல்லாளனுடைய பரம்பரை, உலகத்தில் என்றும் வளர்ந்தோங்கி விளங்கும்.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

"தென்புலத்தார்தெய்வம் விருந்துஒக்கல்தான் என்ருங்கு
ஐம்புலத்தாருேஓம்பல் தலை" (43)

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (44)

என்று இல்லறத்தார்க்குச் சமுதாயத்தில் செய்யவேண்டிய அறங்களை எடுத்தியம்பினர். மக்கள் வாழ்வு மலர, அன்பும் நண்பும் இன்றியமையாதன. அன்பினால் ஆர்வமும் ஆர்வத்தால் நண்பும் உண்டாகும். உலகில் செய்தற்கு அரிய பொருள் நட்பு. அதனைப் பெறும் வழியைக் கூறிய திறம் மகிழ்ச்சியூட்டுகின்றது.

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு" (74)

அளவிட முடியாத சிறப்புத் தருவதாகிய நண்பு பிறப்பதற்குக் காரணமாகிய அன்பும் ஆர்வமும் தழைத்தோங்க வேண்டும். விருந்தினரைப் பேணி வாழ்தல் கடனாகின்றது. முகம் மலர்ந்து விருந்து போற்றுவான் இல்லத்தில் திருமகள் அகம் மலர்ந்து வந்து தங்குவாள் என்கின்றார். பணிவும் அடக்கமும் உள்ளவராய் இன்சொற் பேசி நன்றி மறவாமல் அழுக்காறு அடையாமல் பிறனில் விழையாமல் பொறுமைபூண்டு புறங்கூறாமல், பயனில் சொற்களும் கூறாமல், ஒப்புரவு, ஈகை, முயற்சி ஆகியன செய்து, தன் குடியையும் உயரச்செய்து வாழ வேண்டிய கடமை மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப் பிற" (95)

என்ற திருக்குறட்பாவின் இயல்பினை மேற்கொண்டு, பணிவும் இன்சொல்லும் உடையவனாதலே ஒருவனுக்கு அழகாகும். பிற அணிகள் அழகு தருவன அல்ல. ஆகவே, இன் சொல்லாகிய அழகுடன் விளங்கும் ஒருவன் நன்றியறிவு உள்ளவனாகவும் இலங்க வேண்டும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை,
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (110)

என்பது உற்று நோக்கத் தக்கது. பெரிய அறங்களை அழித்தவர்க்கும் அந்தப் பாவத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டு. ஆனால் ஒருவன் தனக்குச் செய்த நன்றியை நெஞ்சார நுகர்ந்து மகிழ்ந்து விட்டுப் பின்பு மறந்தால் அந்த மகனுக்குத் தப்பிப் பிழைக்கும்

வழியில்லை. ஆகவே நாட்டில் உயர் பண்புடன் மக்கள் இயங்கி வறியவரின் பசியை நீக்கி வாழவேண்டும். பொருளற்றவரின் அறிவு சிதையவந்து தாக்கும் பசியைப் போக்கவேண்டும். அதுவே, பொருள் பெற்றவர் பெற்ற பொருளை வைக்கும் சிறந்த இடம்.

> "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
> பெற்றான் பொருள்வைப் புழி" (226)

என்றார். அறச் செய்கையாகிய இடத்திலேதான் பொருளை வைக்கவேண்டுமேயன்றிப் பயன்பட விடாமல் தொகுத்து வைக்கக் கூடாது.

பசியும் பிணியும்பகையும்நீங்க வசியும் வளமும் சுரக்க மக்கட் சமுதாயம் வாழ்வதற்கு மிக இன்றியமையாதது முயற்சி. வண்டி பதிந்த இடங்களிலும், ஏற்றமான வழிகளிலும் காளைகள் ஊக்கங் கொண்டு மூக்கினைத் தரையில் ஊன்றியும் கால்களால் தவழ்ந்தும் அரிது முயன்று இழுத்துச் செல்வது போலக் கடும் முயற்சி செய்கின்றவனை எதிர்க்கின்ற துன்பமும் துன்பப்பட்டு விலகிவிடும்.

> "மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
> இடுக்கண் இடர்ப்பா டுடைத்து" (624)

என்ற குறளினை மனத்துட் கொண்டு உழைத்தல் வேண்டும். அதற்கு உரிய ஊக்கமும் வேண்டும். பெருகிய வெள்ளத்தின் அளவுக்கே தாமரைப் பூவின் காம்பும் நீளும். அதுபோல் ஒருவன் கொண்ட ஊக்கத்தின் அளவுக்கே அவனது உயர்வும் உயரும். ஆதலால் தாழாத முயற்சி கொண்டு ஒவ்வொருவரும் நம் சமுதாயம் ஓங்க உயர் செயல்கள் புரியவேண்டும். அங்ஙனம் முயல்பவர் தங்கள் தங்கள் குடும்பத்தை உயரச்செய்யவேண்டும். அவர்கட்குத் தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு முற்பட்டுவந்து துணை செய்யும்.

> "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்", (1023)

என்பது முயற்சிக்கு வேண்டிய விரைவினைக் காட்டுகின்றது.

பிறர் மெச்ச வேண்டுமென்றோ அல்லது மக்கள் துதிசெய்ய

வேண்டுமென்றே நினையாமல் புறத்தூய்மையோடு அகத்தூய்மை யும் உடையவராக விளங்க ஏதேனும் ஒரு திருக்குறளைத் தன் செயலுக்கு மேற்கோளாகக்கொண்டு விளங்கிச் சமுதாயத்துக்குத் தொண்டு செய்வதே சாலச் சிறந்தது என்று கூறலாம். அடியே னைப் பொறுத்தமட்டில்

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்"; (109)

என்ற திருக்குறளின் பொருள் நெறியினையும்,

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (314)

என்ற பாடலின் வழியினையும் மேற்கோளாகக் கொண்டு முயல் கின்றேன். அவ்வழியில் நின்று ஒய்யுமாறு அருளவேண்டி எங்கு முள செம்பொருளை இறைஞ்சி முடிக்கின்றேன். வணக்கம்.

வெல்க தமிழ்! ஓங்குக வள்ளுவம்!!

---

குறிப்பு:- 7—7—67-இல், மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழாவின்போது நடைபெற்ற சமுதாயத் துறைக் கருத்து ஆய்வுக்குழுவில் திரு. வே. வ. இராமசாமி எம் பி., (தலைவர், விருதைத் தமிழ்க் கழகம்) அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரை.

# திருக்குறளும் வழக்கியலும்

******
**

திரு: மா. சண்முகசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.
(செயலாளர், சென்னை அரசு ஆட்சி மொழிக்குழு)

வழக்குத் துறையில் திருக்குறள் எவ்வாறு பயன்படும் என்பது பற்றி ஆய்வு செய்ய இருக்கிறோம்.

குறளை ஒரு அற நூலாகவே கருதி வந்துள்ளோம். குறள் ஒரு அற நூல் தான். ஆனால் அறமும் சட்டமும் எவ்வாறு ஒன்றி நிற்கின்றன என்ற உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் அற நூலும் சட்டக் கருத்துக்களைக் கொண்டதாக விளங்கவேண்டுமென்ற உண்மையை நாம் உணர்ந்தவர்களாவோம்.

சட்டத்தின் அடிப்படையிலே பொதுவாக வழக்குகள் தீர்க்கப்பெறுகின்றன. எனவே வழக்குத் துறையில் எவ்வகையில் அற நூலான திருக்குறள் பயன்படும் என்ற ஆராய்ச்சி நம் அறிவுக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

முதலில் அறமும் சட்டமும் எவ்வாறு ஒன்றி உள்ளன என்பது பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

அறம் மக்களின் இசைவான வாழ்விற்கு ஏற்ற பண்பாடுகளை உணர்த்திச் சமுதாய இன்பத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே தான் வள்ளுவர்,

> "அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
> புறத்த புகழும் இல" (குறள்-39)

என்று கூறியுள்ளார்.

சட்டமும் மக்களின் இன்ப வாழ்விற்கு ஏற்ற வகையில் அவர்களிடையே எழும் உறவு முறைகளை ஒழுங்குறச் செய்து நீதி வழங்குவதற்கு உற்ற கருவியாக உதவுகின்றது. இவ்வாறு, அற

மும் சட்டமும் மக்களின் இன்ப வாழ்வினை இலக்காகக்கொண்டே இலங்குகின்றன.

சட்டக் கொள்கைகள் பல அறத்தின் அடிப்படையில் தோன்றியவை என்பது எளிதில் புலனுகும். குற்றம் இழைத்தோரைத் தண்டிக்கிறது குற்ற இயல் சட்டம். குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல் வேண்டுமென்பது அறநெறியாகும். கற்பினைக் காக்க வேண்டுமென்று அறம் கூறுகிறது. கற்பழித்தல் கடும் குற்றம் என்று சட்டம் விதிக்கின்றது. 'சட்டமும் அறமும் இணைந்து நிற்கின்றன. சட்ட நெறியில் அடங்கியுள்ள அறக் கொள்கைகளை ஒருவர் உணராவிடில் சட்டத்தின் அடிப்படைத் தன்மையை அறிதல் இயலாது" என்கிருர் பேராசிரியர் குட்ஹார்ட்.

(There is in England, therefore, a close bond between law and morals and it is impossible to understand the nature of English Law unless we also recognise the verious moral ideas which it represents — Dr. A. L. Good-hart in "English Law and the Moral Law.")

சட்டமும், அறமும் மக்களின் இன்ப வாழ்வு என்ற கொள்கையைக் கொண்டு இயங்கினுலும், அவை வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றன. அறம், தனி மனிதப் பண்பினை உயர்த்தும் வகையால் சமுதாய நலனைக் காக்கும் வகையால் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குறச் செய்கிறது. "நன்மையைச் செய்" என்று அறம் கூறுகிறது; "தீமையைச் செய்யாதே" என்று சட்டம் தடுக்கிறது. அறம், காரணங்காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது; சட்டம், கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது; சட்டம் அச்சுறுத்துகிறது. மக்களின் சிந்தனையை உயர்த்துகிறது அறம்; செயல்களைத் திருத்துகிறது சட்டம்; மக்கள் மனத்திலே இயல்பாயெழுவது அறநெறி; மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாருத நெறியினைக்கொண்டது, சட்டம் மாறும் விதிகளைக்கொண்டது.

இனி, எவ்வாறு சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்கள் அறநூலாகிய திருக்குறளிலே பொதிந்துகிடக்கின்றனஎன்பதைக் காண்போம்.

## மனத்தானும் மாணுசெய்யாமை

குற்ற இயல் சட்டத்திலுள்ள அடிப்படைக் கொள்கை, குற்ற மனத்தோடு குற்றச்செயலைச் செய்வோரைத்தான் தண்டிக்கவேண்டுமென்பதாகும்.

பிறருடைய குடையை அல்லது பிறருடைய பேனு ஒன்றைத் தமது பேனுதான் என்று தவறுதலாகக் கருதி ஒருவர் எடுத்துச் சென்றுல் அவரைத் திருட்டுக் குற்றத்தைச் செய்தார் என்று சொல்வதற்கில்லை. பிறருடைய பேனுவைத் தன்னுடையதாக்க வேண்டுமென்ற தீய கருத்தோடு ஒருவர் அதை எடுத்துச் சென்றுல்தான் அது திருட்டுக்குற்றமாகிறது.

நோயாளியின் நோயைப் போக்குவதற்கென்று அவருடைய உடலை அறுக்கும் வைத்தியர் குற்றவாளியாவதில்லை. ஆனுல் பகையின் காரணமாக ஒருவர் உடலை மற்ருெருவர் கத்தியால் காயப்படுத்தினுல், அது கொடுங்குற்றமாகிறது. வைத்தியர் நோயாளியை, உடலிலே கத்தியால் கீறியது நோயைக் குணப்படுத்தவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான். பகைவரின் உடலுக்கு ஊறு விளைத்தது அவருக்குத் துன்பம் விளைவிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்துடன். எனவே, வைத்தியரின் செயல் குற்றமாவதில்லை ஆனுல் பகைவனின் செயல் குற்றமாகிறது. இவ்வாறு, குற்றம்செய்யும் செயலைவிட அவர் மனத்திலே கொண்ட எண்ணமே முக்கியமானது; அந்த எண்ணத்தின் அடிப்படையிலே, அச்செயல் குற்றமாகிறது என்பதைக் காண்கிருேம். இதை ஆங்கிலத்தில் Guilty mind (குற்ற மனம்) என்றும், இலத்தீன் மொழியில் Mons Rea என்றும் கூறுவார்கள்.

இந்த அடிப்படைச் சட்டக் கொள்கையையும் குறளிலே நாம் தெளிவாகக் காண்கிருேம். “இன்னு செய்யாமை” என்ற அதிகாரத்தில் ஆசிரியர் கூறுகின்ருர் —

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணுசெய் யாமை தலை" (குறள், 317)

"மனத்தானும் மாணுசெய்யாமை" என்ற சொற்றொடரில் அடங்கும் நுட்பக் கருத்தை நாம் நன்கு காணும்வண்ணம், "ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவமில்லையென்பதுபெற்றும்" என்று பரிமேலழகர் விளக்குகின்றார். பிறருக்குத் தீங்கு பயப்பதையெல்லாம் "இன்னுமை" என்று வள்ளுவர் கூறவில்லை. தீய கருத்தோடு தீமை செய்வதையே 'இன்னுமை' என்கின்றார். 'மனத்தோடு மாணு செய்யாமையே தலையாய அறம் என்கின்றார். பிறர் செயலை வைத்து மட்டும், அதன் தன்மையை அறநூல் ஆசிரியர் அறுதியிட்டுவிட வில்லை. பிறர் செயலுக்கு மூலமான ஆக்கநிலையின் அடிப்படையிலே இன்னுமை எது என அவர் வரையறுக்கின்றார். மாணு செய்தலும், அதற்கான மன நிலையும் சேர்ந்தே இன்னுமை ஆகிறது என்பதை இக்குறளிலே தெளிவாகக் காண்கிறோம்,

இவ்வாறு, 'குற்ற மனம் இன்றிக் குற்றச்செயல் இல்லை' என்று சட்ட நெறியும், ,இன்னு மனம் இன்றி இன்னுச் செயல் இல்லை' என்று குறள்நெறியும் ஒன்றியுள்ளன.

## வினைத் தூய்மை

ஒருவனைக் குற்றவாளியா என்று காண்பது, அவன் குற்றச் செயலை வேண்டுமென்றே கருதி செய்தானு என்பதை வைத்துத் தான், அவன் எதற்காக அச்செயலைச் செய்தான்; என்ன நோக்கத்தோடு அதைச் செய்தான் என்பது பற்றி சட்டம் அக்கறை கொள்வதில்லை. நல்ல நோக்கத்தோடு ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்தாலும் அது குற்றமேதான்: நோக்கம் நல்லதாக இருக்கிற தென்பதற்காக, ஒரு குற்றச்செயலை சட்டம் மன்னிப்பதில்லை. நோக்கத்தை ஆங்கிலத்தில் "Motive" என்பார்கள். நோக்கம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், கருதிச்செய்த குற்றம் குற்றம்தான் என்பது ஆங்கிலச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கை. "ஆண்டின்" என்ற சட்ட இயல் வல்லுநர் இவ்வாறு கூறியுள்ளார்.—

At common law, the motive of the accused is not a necessary element of his liability, and therefore, the prosecution has no need to prove what his motive may have been. -- Austin.

இக்கருத்தினைக் குறள் நெறியிலும் காண்கின்றோம். வினைத் தூய்மையற்ற பழிச் செயலை ஒருவர் நல்ல எண்ண நோக்கத்திற்காகவும் செய்தல் தகாது என்கிறார் வள்ளுவர். தக்கதொரு மேற்கோளைக் காட்டி இந்த நன்னெறியை நமது மனத்தில் அவர் நன்கு பதியவைக்கின்றார்.

தாயின் பசியைப் போக்குவதை விட ஒரு உயர்ந்த நோக்கம் ஒருவனது வாழ்வில் இருத்தல் முடியாததுதான். அத்தகைய உயர்ந்த குறிக்கோளைக் காட்டி, அதன் பொருட்டுக்கூட வினைத் தூய்மையற்ற பழிச்செயலை ஒருவன் செய்தல் கூடாது என்கிறார் வள்ளுவர்.

"ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள், 656)

இவ்வாறு வினைத்தூய்மை முக்கியமானது என்பதைக் குறள் நெறியும் சட்ட நெறியும் வலியுறுத்துகின்றன.

## தன் நெஞ்சறிவது பொய்யற்க

சட்டத்திலே பொய்ச் சான்று கூறுதல் குற்றமாகும். பொய்ச்சான்று கூறுதல் என்றால் பொய்யினைக் கூறுதல் என்று பொருள் அல்ல. கூறிய பொருள் பொய்யாக இருப்பதுடன், அதைக் கூறியவர் பொய் என்று தெரிந்தே கூறி இருத்தல் வேண்டும். தமக்குப் பொய் என்று தெரிந்த ஒன்றை மெய்யாக ஒருவர் கூறுவதுதான் 'பொய்ச்சான்று கூறுதல்' ஆகின்றது. உண்மைக்கு மாறானது பொய் என்று கூறாமல், உள்ளத்திற்கு மாறானது பொய் என்று சட்டம் விதிக்கின்றது,

இந்தியக் குற்ற இயல் சட்டத்தில் 191-ஆவது பிரிவில், "பொய்ச்சான்று கூறுதல்" என்ற குற்றத்தின் இலக்கணம் கூறப்படுகிறது.

Whoever being legally bound by an oath or by an express provision of law to state the truth, or being bound by law to make a declaration upon any subject, makes any statement which is false, and which he either knows or believes to be false, or does not believe to be true, is said to give false evidence. -- Sec. 191 of the Indian Penal Code.

திருக்குறளிலே இதே சட்டக் கருத்தைக் காண்கின்றோம் —

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்." (குறள், 293)

"தன்நெஞ்சறிவது பொய்யற்க" என்ற தொடர், ஒரு சாதாரண சொற்றொடராக, அரிய பொருள் அடங்கியதாக நமக்கு முதலிலே தோன்றுகிறது. ஆனால், பொய்யுரைத்தல் என்பதைச் சட்டம் எவ்வாறு விளக்குகிறது என்ற உண்மையை நாம் கண்டபின், தன் நெஞ்சறிய ஒருவர் பொய் கூறுவதுதான் அறத்திற்கு மாறானது, சட்டத்திற்கும் மாறானது என்ற உண்மையை நாம் காண்கின்றோம். எனவே, மனம் அறிந்த ஒன்றை மறைத்துக் கூறுதலே பொய் கூறுதல் என்று சட்ட நெறி. 'தன் நெஞ்சறிவது பொய்யற்க' என்ற குறள் நெறியாகின்றது.

## வாய்மை எனப்படுவது தீமை இலாத சொலல்

ஒருவர் உண்மையே கூறினாலும், அதனால் பிறருடைய புகழுக்கு ஊறு விளைந்தால் அது 'அவதூறு' (Defamation) என்ற குற்றமாகும். எனவே, சட்டத்தில் உண்மையைக் கூறுவதை விடப் பிறருக்குத் தீமை விளையாத விதத்தில் ஒருவருடைய கூற்று அமைவதே முக்கியமாகும். சட்டம் மக்களின் பொது நலனைப் பேண முற்படுவதால் மக்களுக்குத் தீங்கு பயக்கும் ஒரு கூற்று உண்மையானதாக இருந்தாலும், அந்த உண்மைக் கூற்றையும் சட்டம் விலக்குகிறது. அதைக் கூறியவரைச் சட்டம் தண்டிக்கிறது.

திருவள்ளுவர் 'வாய்மை' என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது, அதை உண்மை என்று கூறாமல், பிறருக்குத் தீங்கு

பயவாத சொல்லே வாய்மையாகும் என்று விளக்குகின்றார்.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" (குறள், 291)

ஒரு சொல்லின் விளைவை வைத்து அச்சொல்லின் தன்மையை உறுதிப்படுத்துவது எவ்வாறு சட்டத்தின் கொள்கையோ, அவ்வாறே, அது குறளின் கொள்கையாகவும் அமைந்துள்ளது.

குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை விதிக்கும் முறை பற்றிச் சட்ட இயலில் பல கொள்கைகள் உண்டு. அதில் மிக முக்கியமானவை குற்றத்திற்கு ஏற்றபடி தண்டனை அமைய வேண்டும்; குற்றவாளி மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாதவகையில் அத்தண்டனை இருத்தல் வேண்டும்; குற்றவாளியின் வயது, மனநிலை, குற்றத்தின் தன்மை, குற்றம் இழைத்த சூழ்நிலை இவற்றை எல்லாம் தக்காங்கு நாடித் தண்டனையை நிர்ணயிக்க வேண்டும் என்பவையாகும். இக்கொள்கைகளை எல்லாம் தன்னுள் அடக்கி நிற்கின்றது இக்குறள் --

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து" (குறள், 561)

சட்டத்திலே மூன்று ஆண்டுகள் திருட்டுக் குற்றத்திற்குத் தண்டனை விதிக்கலாம் என்று இருந்தாலும்கூடப், பொதுவாகத், திருட்டுக் குற்றம் செய்தவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களே தண்டனையாக விதிக்கப்படுவதை அனுபவத்தில் காண்கிறோம். சட்டத்திலே ஏன் மூன்று வருடங்கள் என்று தண்டனை விதிக்கவேண்டும்? குற்ற நீதிமன்ற நடுவர்கள் ஏன் குறைந்த தண்டனையை விதிக்கவேண்டும்? திருவள்ளுவர் விடை கூறுகின்றார் விடை --

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்." (குறள், 562)

சட்டம் கூறும் தண்டனை கடிதோச்சுவதாகவும், நீதிபதி வழங்கும் தண்டனை மெல்ல எறிவதாகவும் அமைந்துள்ளதென்பதை நாம் காண்கின்றோம்.

ஒருவழக்கிலே தீர்ப்பை எவ்வாறுகூறுவது என்பதுபற்றிச் சட்ட நூல்களிலே விரிவானவிளக்கங்கள் உண்டு. வழக்கிலேஉள்ள கூறுகளை நன்கு ஓர்ந்து ஆய்தல் வேண்டும்; வழக்கில் ஈடுபட்டவர்களிடம் கண்ணோட்டம் காட்டலாகாது; நடுவு நிலைமை தவறாது இருத்தல்வேண்டும்; கூறும் தீர்ப்பை சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தேர்ந்து கூறுதல் வேண்டும். இவ்வாறெல்லாம் விதிகளும், மரபுகளும் சட்ட நூல்களிலே உண்டு. இவற்றைச் சுருக்கமாக வள்ளுவர் கூறுகின்றார் --

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை." (குறள், 541)

இவ்வாறு, இன்னும் எத்தனையோ சட்டக்கருத்துக்களை விளக்கும் அற நூலாகவே விளங்குகின்றது திருக்குறள். அவற்றை ஓர்ந்து உணர்வதற்குப் போதுமான சட்ட அறிவு, குறள் அறிவு நமக்கு வேண்டும். இந்தக் கண்கொண்டு திருக்குறளை ஆய்வோமானால், அது எவ்வாறு வெறும் அறநூலாக மட்டுமின்றி, ஒரு சட்ட நூலாகவும் இலங்குகிறது என்பது தெளிவாகும். சட்டத்தின் அடிப்படையில் வழக்குகள் ஆயப்படுவதால், வழக்குத் துறையிலே திருக்குறள் மிகவும் பயன்படும் என்பதை நாம் நன்கு காண்கிறோம்.

நீதித் துறை நமது தாய்மொழியான தமிழிலே இயங்கும் காலம் நெருங்கிவிட்டது. நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் தமிழிலே விரைவில் வழங்கப்படும். அப்போதெல்லாம் தீர்ப்புகள் பலவற்றிலும் திருக்குறள் கருத்துக்கள் ஏற்றமுடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# மாசு கற்பிக்கும் முயற்சி

—-❋—-

ஆட்சிச் சொற் காவலர்,

திரு. கீ. இராமலிங்கனுர், எம். ஏ.

சென்னை-30.

இம்முயற்சி நெடுங்காலமாக நடந்துவருகிறது. திருக்குறள் நூலை வள்ளுவப் பெருந்தகையார் வரைந்து வெளியிட்ட நாள் முதலே நடந்துவருகின்றது என்னலாம். நூலின் பெருஞ்சிறப்பினை நுணுகியறிந்த நேர்மை மனம் படைத்தவர்கள் நம் நாட்டவரும் அயல்நாட்டவரும் நூற்பொருளைப் பாராட்டிச் சொல்லச் சொல்ல, இந்தக் குறை சுமத்தும் முயற்சியும் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது. இன்றுகூட இது நின்ற பாடில்லை. அண்மையில், ஒரு சமயப் பெருந்தலைவர் சொன்னதாகக் குறளைக் குறைபடுத்தும் செய்தியொன்று நாள்தாள்களில் பரவிப் பரபரப்பை உண்டாக்கியது பலருக்கு நினைவிருக்கும்.

இங்ஙனம் குறைசொல்பவர்கள் எந்த நாட்டினர்? எந்த மொழியினர்? என்னும் கேள்விகளுக்கு விடைசொல்ல வாய் கூசுகிறது, எழுதக் கை கூசுகிறது. தமிழகத்தில் பிறந்து, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள சிலரே, இவ்வாறு உலகம் போற்றும் உயரிய தமது நூலுக்கு மாசு கற்பிக்கும் முயற்சியிலே ஈடுபடுகின்றனர்! இதை யாரிடம்போய் முறையிடுவது? நம்மவர்களாகிய ஒருசிலர் மீது, நாமே எப்படிக் குறை கூறுவது?.

இச்சிலருக்கு இந்நூலின்மீது ஏன் வெறுப்பு ஏற்படவேண்டும்? இடைக்காலத்தில் நம்மிடையே நுழைந்துவிட்ட சில புதுக் கொள்கைகள்தாம் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. என்ன கொள்கைகள் அவை? நமது பழைய கொள்கைகள் எவை? புதியகொள்கைகளுக்கும்பழையவற்றிற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை? இவற்றைச் சிறிதளவு ஆராய்ந்தால், உண்மை

விளங்கும். வெறுப்பு ஏற்படுவது தேவைதானு என்பதையும் அறிந்துகொள்வோம்.

தமிழர்களாகிய நாம், குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்நாட்டின் வடபகுதியிலும் வாழ்ந்துவந்தோம். இந்தச் செய்தியைச் சிந்து மண்டலத்திலுள்ள மொகஞ்சதரோ ஆரப்பா என்னும் இடங்களில் அகழ்ந்தெடுத்த எழுத்துச் சான்றுகளாலும் தெரிந்துகொள்ளுகிறோம். அதற்கு முன்பு, எத்தனைக் காலத்துக்கு முன்பிருந்து நாமும் நமது அன்னை மொழியாம் தமிழும் இந்நாட்டில் நிலவிவந்திருக்கிறோம் என்பதைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது.

பல்லாயிரம் ஆண்டுகளாக நமது பண்பாடும் நம்மோடு வளர்ந்துவந்திருக்கிறது. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பதே நமது பழைய கொள்கை. பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பிக்கும் போக்கு நம்மிடையே இருந்ததில்லை.

நமது கடவுள் கருத்தும் மிக உயர்ந்த கருத்தாகும். எல்லா உலகங்களைப் படைத்து அளித்துவரும் இறைவன் பேர் அருளுடைய ஒருவனே என்று உணர்ந்துவந்திருக்கிறோம். பல கடவுளர் கொள்கை நமக்குப் புறம்பானது.

ஒழுக்கத்துக்கு முதல் இடம் தருவது, மனந் துயரால் வாய்மை பிறழாது நடப்பது, இவையே நமது அறநெறியின் அடிப்படையாகஇருந்தன. கொல்லாமை புலால் உண்ணுமையைப் போற்றிவந்திருக்கிறோம்.

பொருளீட்டுவதிலும் நாடாள்வதிலும் நேர்மையைக் கடைப்பிடித்தோம். அறம் வழங்குவதில், இனத்துக்கு இனம் வேறுபாடு காட்டும்படி நமது நீதி நூல்கள் கூறவில்லை. படிப்பதிலும் எந்தக்குலத்தவரும் அளவுவரையறையின்றிப் படிக்கலாம், தடை கிடையாது.

தொழில்களில் வேளாண் தொழில் தலைசிறந்ததாகப் பேணப்பெற்றது. இத்தொழிலில் ஈடுபடுகிறவர்களை மக்களில் சிறந்தவர்கள் என்று பாராட்டினார்கள்.

இல்வாழ்க்கை பெரிதும் புகழப்பெற்றது. அறநெறி மாருமல் அதனை நடத்தவேண்டும்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"

என்று பிற்காலத்தில் வள்ளுவர் கூறிய கருத்துகள் அவர் காலத்துக்குநெடுநாளைக்கு முன்பே நம்மவர்கள் கைக்கொண்டிருந்தனர். இல்லற இன்பத்தை மிக்க அறிவார்ந்த முறையிலும் நுண்ணிய வகையிலும் நுகர அக்காலத்தில் அறிந்திருந்தனர்.

இத்துணை மேன்மை வாய்ந்த பண்பாட்டையுடைய நம்மிடையே, நுழைந்த புதுக் கொள்கைகள் வருமாறு.-

பிறப்பினுல் உயர்வு தாழ்வு இருக்கவேண்டும் என்பது கடவுளின் ஆணை. பல கடவுளர் நமக்கு மேல் உள்ளனர். தெய்வங்கள் நமக்குக் கெடுதிசெய்யும் இயல்பின. அவற்றிற்கு மன நிறைவு உண்டாக்க உயிர்க்கொலை செய்து அவைகளுக்குப் படைக்கவேண்டும். அப்படிப்படைத்த புலாலை உண்பது சிறப்பு.

ஒழுக்கங்கெட்டால் அதற்குக் கழுவாய் உண்டு. பொருளீட்டுவதில் கட்டாயம் நேர்மையைப் பொருட்படுத்தியாக வேண்டுமென்பதில்லை. மன்னன் விலைமகளிர் மீதும், கள் மீதும் வரிபோட்டு வருமானம் பெறலாம். மாற்ருனை வெல்ல, ஒழுக்கங்கெட்ட முறைகளையும் கையாளலாம். உயர்ந்த இனத்தார் என்பவர் கொலைசெய்தால் எளிதான தண்டனையோடு விட்டுவிட வேண்டும். தாழ்ந்த இனத்தவர் என்பவர் சிறு தவறு செய்தாலும் கையை வெட்டிவிடுதல் போன்ற கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்.

தொழில்களில் வேளாண் தொழில் மிகவும் தாழ்ந்தது. அதனைத் தாழ்ந்த இனத்தவரே செய்யவேண்டும். உயர்ந்த இனத்தவர்கள் என்பவர்கள் இத்தொழிலைச் செய்வது இழிவு.

இல்வாழ்க்கையில் கற்பு நெறி தவறினுல் அதற்கும் கழுவாய் உண்டு. அண்ணனுக்குக் குழந்தை பிறக்கவில்லை யென்ருல், தம்பியைப் பயன்படுத்திப் பிள்ளைப்பேற்றை அடையலாம்.

இடையில் நம்மிடையே நுழைந்த இக்கொள்கைகள் எப்படியோ நம்மில் சிலரது கருத்தை ஈர்த்தன. நாளாக நாளாக, இக்கொள்கைகள் பலரிடையே பரவின. பலர் இவற்றை விடாப் பற்றுகப் பற்றிக்கொண்டனர். இவற்றை விளக்கும் நூல் பல வற்றை எழுதிக்கொண்டனர்.

நூல்களை எழுதுவதற்கு, இற்றைக்கு 3000 அல்லது 3500 ஆண்டுகளுக்கு முன்பு நாமே உண்டாக்கிக்கொண்ட சமசுக்கிருதம் என்னும் வடமொழி வாய்ப்பாக அமைந்தது. அதனை மாந்தர் அனைவரும் எளிதில் பயின்றுகொள்ளமுடியாது. காரணம், கடின மான இசைகளையும், இயல்புக்கு மாறுன முயற்சியினுல் மட்டுமே ஒலிக்கக்கூடிய பகுதிகளையும், அது கொண்டதாக இருந்தது. அதில் எழுதிவைத்துக்கொண்டவற்றைக் கடவுளரே எழுதினர் என்று சொன்னுலும், அம்மொழியைக் கல்லாதவர்கள் நம்புவர் என்னும் நம்பிக்கை அம்மொழியைப் பயின்றவர்களிடையே இருந்துவந்தது. பலரும் அந்த மொழியைப் படிக்கக்கூடாது என்னும் கட்டுப்பாடும் செய்யப்பட்டது.

பழந்தமிழ்க் கொள்கைகளுக்கு நேர்மாருக இந்தப் புதுக் கொள்கைகள் இருந்தமையாலும், இவை நாளுக்கு நாள் மக்க ளிடையே பரவினுல். நாடு கெட்டுவிடுமே என்னும் அச்சத்தாலும் மக்களை இந்த இழிவான கருத்துக்களிலிருந்து மீட்கும் பேரருள் மனத்தாலும், திருவள்ளுவர், தமது திருக்குறளை எழுதினுர். அவர் எழுதியவை நாட்டுக்குப் புதியவை அல்ல நெடுங்காலமாக நம் நாட்டில் நிலவி நலம் பயந்துவந்த பழங் கொள்கைகளையே தம் நூலில் நிலைபெறுத்தினுர்.

புதுக்கொள்கைகளை யேற்றுக்கொண்டு, அவற்றை நடை முறையில் கொணர்வதில் இன்பமும் பயனும் அடைந்து கொண் டிருந்த சிலருக்கு, வள்ளுவர் கூறியவை பிடிக்காமல் இருந்ததில் வியப்பில்லை. நூலில் கூறியதையும் நேர்மையான உள்ளமுடைய வர் எவரும் மறுக்கமுடியாது என்பதைச் சிலர் உணராமல் இருந்திரார். எனவே, நூலை எல்லா வகையிலும் இழித்துக்கூறி எவரும் அதிலுள்ள மேன்மையான பழங்கொள்கைகளைப் போற்றுமல் இருக்கச்செய்யவேண்டும் என்று முனைந்தனர்.

முதலில் அதனைஎழுதியவர் ஒருஒழுக்கங்கெட்டவர்என்னும் பொய்ச் செய்தியைப் பரப்பினர். உயர்ந்த குலத்தவர் என்று அவர்கள் கருதும் ஒரு குலத்தில் பிறந்த ஒருவர், மிகத்தாழ்ந்த வர்என்று அவர்கள் இழித்துக்கூறும் புலைச்சி ஒருத்தியிடம் தவருக நடந்துபெற்ற பிள்ளையே வள்ளுவர் என்றனர். தவற்ருெ ழுக்கமுடையாருக்குப் பிறந்த ஒருவரின் நூலை அறிஞர்களும், நல்லவர்களும் போற்றலாமா என்பது அவர்கள் கேள்வி. போற்ற வேண்டாம் என்பது அவர்கள் கோரிக்கை. போற்றமாட் டார்கள் என்பது அவர்களது நம்பிக்கை.

அவர்கள் கருத்தின்படி மிக உயர்ந்ததான ஒரு குலத்தவ ருக்குப் பிறந்தவர்தானே வள்ளுவர். பின்னை, அவர் எழுதிய நூல் விழுமிய நூலாகாதா? என்று எவராவது எண்ணலாம் அல்லவா? நூலில் உயர்நலங்கள் பல இருப்பதை எவரும் மறைத்துவிட முடியாது என்பதையும் அவர்கள் அறிவார்கள். அந்நூலின் ஆசிரியர், ஒரு உச்சகுலத்தில் பிறந்தாரின் மகன் என் னும் காரணத்திஞல்தான் அந்நூலில் உயர்நலங்கள் சில இருக் கின்றன என்று நூலைப் படிப்போர் எண்ணிக்கொள்ளட்டுமே என்பதும் அவர்கள் உள்நோக்கம்.

இந்த இழிவான கட்டுக் கதைக்கு அரண்செய்வதாக, அவர்கள், ஏமாந்து எண்ணிக்கொண்டு, எடுத்துக்காட்டுவது, திருக்குறள் நூலிலுள்ள முதல் குறளை. அதில் வருகிற 'ஆதி' 'பகவன்' என்னும் இரு சொற்களும் முறையே வள்ளுவரின் தாயார் பெயரும், தந்தையார் பெயரும் ஆகும் என்பர். 'ஆதி' என்பது ஆதல் ஆற்றலையும், பகவன்' என்பது பகுத்தல் ஆற்ற லையும் சுட்டிக்கொண்டிருக்கின்றன என்பதை அவர்கள் உணரார்கள். இவ்வுலகத்தை ஆதல் செய்பவரும், அதாவது படைப்பவரும், பின் அதைப் பகுத்தல் செய்பவரும், அதாவது ஐம்பூதங்களாகப் பிரித்து அழிப்பவரும் எனக் கடவுள் ஒருவர் உண்டு என்பதை வள்ளுவர் முதல் குறளில் உணர்த்துகிருர். இரண்டு செயல்களைச் சொல்லவே இடையிலுள்ள காத்தல் செய லையும் கடவுள் செய்கிருர் என்பதுதானே போதரவைத்தார். படைக்கும் தொழில் பெண்மைத் தொழிலாதலின் 'ஆதி' என் னும் பெண்பால் சொல்லால் குறித்தார். அழித்தல் தொழிலுக்கு

ஆண்பாற் சொல்லே அமைத்தார். ஆதி, பகவன் என்னும் சொற்கள் வடசொற்கள் என்று சொல்லி, வள்ளுவர் வடசொல் அறிந்தார் அதனால் அவர் ஒரு உயர் குலத்தார் மகன் என்றும் உய்த்துணரவைக்கிறார்கள் இக்கட்டுக்கதைக்காரர்கள். குறள் நூலில் போற்றத்தக்க பலசெய்திகள் உள்ளனவென்றால், அவை யாவும், வடமொழி நூற்களிலிருந்து எடுத்தவை என்றும் வள்ளுவர் உயர் குலத்தவர் மகனாதலின் அவற்றை எடுத்தாண்டுகொள்ளும்அளவுக்கு இயல்பாகவே வடமொழியறிவு அவருக்கு இருந்தது என்றும், வாதாடுவார்க்கும் வகைசெய்துகொண்டார்கள்.

வள்ளுவர் தம் குறளில் கூறியுள்ளது போன்ற, பண்டைத் தமிழ்ப் பண்பாட்டுக் கருத்துக்களை ஔவையார், கபிலர் முதலியோரும் கூறுகின்றனராதலின், அவர்களும் வள்ளுவரின் உடன்பிறந்தவர்கள் என்றும் கட்டுக் கதையில் புகுத்திவிட்டனர். இக்கட்டுக்கதையை, ஒரு பாடநூல் வெளியீட்டு வணிகர் சின்ன வகுப்புப் பாடப்புத்தகத்தில், சேர்த்துவிட்டிருந்தார். இது சில ஆண்டுகளுக்கு முன்பு. பார்த்துத் திடுக்கிட்டுப் போனேன். அவ்வணிகர் ஒரு 'உயர்குலத்தவர்' என்று பின்னர் தெரிந்துகொண்டேன்.

தென்இந்திய வரலாறு எழுதும்போது, தமிழ் இலக்கிய இலக்கணச்செய்திகளையும், கல்வெட்டுக்கருத்துக்களையும், பெரும்பாலும் அடிப்படையாகக்கொண்டு எழுதுவது பொருத்தம். திருக்குறள், தென்இந்திய மக்களின் வாழ்க்கை விளக்கமாக இருப்பதால், அந்நூலிலுள்ள பொருள்கள் அனைத்தையும் பலபட ப்பயன்படுத்திக்கொள்ளவேண்டும் ஆனால், ஒருவரலாற்று ஆசிரியர்எழுதியுள்ள இந்தியவரலாற்றில், திருக்குறள்செய்திகளை மேற்போக்கான முறையில் சுட்டிவிட்டு விடுவதையும், வடமொழி நூற்கருத்துகளை விரித்துரைப்பதையும் படித்தேன். படிப்பவர் உள்ளத்தில் அவர் உண்டாக்க எண்ணும் கருத்து, குறள் அவ்வளவு மதிக்கத்தக்கவை அல்ல என்பதே திருக்குறளில், நேர்மை வற்புறுத்தப்பெறுவது, ஒரு குறைபோலவும் அந்நூலில் காட்டப்பட்டது. நடைமுறைக்கு ஒவ்வாதனவும், வெற்றியுடன் செயலாற்றுதற்கு இயலாதனவுமான, திட்டங்களைத் திருக்குறள்

தீட்டுவதாக அந்நூலில் குறித்திருப்பது அறிஞருக்கு வியப்புத் தரும் இவ்வாறாகக் குறள் நூலுக்கு மாசுகற்பிக்கும் முயற்சி, சில இந்திய வரலாற்று ஆசிரியர்களிடமும் இருப்பதைக் காணலாம்.

'காலத்தால் குறள் நூல் மிகப் பிந்தியது. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டுக்கு உரியது என்று, பல பொருந்தாக் காரணங்களைக்காட்டி, நிறுவ முயல்கின்றனர் சிலர். ஒரு நூல் பிற்காலத்தது என்பதனாலேயே அது சிறந்தது ஆகாது என்னும் எண்ணம் ஒருசிலரிடத்தில் இருப்பதால், அந்த எண்ணம் உடையவர்களாவது திருக்குறளைப் புறக்கணிக்கட்டுமே என்பது அவர்கள் அவாவாக இருக்கும் போலும்.

பொதுவாகக் குறள் எழுதப்பெற்ற காலம் கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் இருக்கலாம் என்பர் மூதறிஞர் மா. இராசமாணிக்கனார் போன்ற ஆராய்ச்சியாளர்கள். கணக்காயனார் சோமசுந்தரபாரதியார் அவர்கள் பல ஆதாரங்களைக் காட்டி, திருக்குறள் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தின் இறுதியில் அல்லது மூன்றாம் சங்கத் துவக்கத்தில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்று முடிவுகட்டுகிறார்கள். உண்மை இங்ஙனமாகக், குறளைப் பிற்காலத்திய நூல் என்பவரின் உள்நோக்கம் நூலுக்கு மாசு கற்பிக்கவேண்டுமென்பதே என்பது வெள்ளிடைமலே.

வடமொழி நூல்களிலுள்ள செய்திகளையே, வள்ளுவர், தம்கொள்கைக்கு ஏற்றவாறு சிறிது மாற்றி எழுதிவிட்டார் என்பது, குறளுக்கு, மாசு உண்டாக்கும் கொள்கையினர் கூறும் காரணங்களில் ஒன்றாகும். இக்கொள்கையுடைய வரலாற்று ஆசிரியர்களும், வட-நூற் கருத்துக்களையே வள்ளுவர் கடன் வாங்கினார் என்று கூசாது பறையறைந்து கூறுகின்றனர்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களையுடையது என்பதை யறிவோம். அறம் வடமொழியில் 'தருமம்' எனப்பெறும். பொருளை 'அர்த்தம்' எனவும் இன்பத்தைக் 'காமம்' எனவும் சொல்லுவர். மனுவும், போதாய

னரும் தருமசாத்திரம் எழுதினர். சாணக்கியரும், கௌடில்லிய ரும் அர்த்தநூல் செய்தனர். காமசூத்திரத்தை வாத்சாயனர் வரைந்தார். இம்மூன்று வகையினரின் கொள்கைகளும், வள்ளு வரின் கொள்கைக்கு நேர்மாறானவையென்பதை இவர்கள் நூல் களை ஒருசிறிது அறிந்தவர்களும் ஒப்புக்கொள்வர்.

மனுநூல் ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுப்பதை எவரும் அறிவர். போதாயனர், தமது தருமசாத்திரத்தில் விருந்தினரை ஓம்புவதைப்பற்றி ஓர் அதிகாரம் எழுதியிருக்கிறார். மதுவகைகளை யும் இருபத்துஐந்து வகையான விலங்குகள் பறவைகளின் இறைச்சிகளையும் விருந்தினருக்குப் படைக்கவேண்டும் என்கி றார். இந்த இரண்டு நீதிநூலாசிரியர்களை வள்ளுவர் பின் பற்றினார் என்று எவர் கூறத்துணிவர்.

சாணக்கியர் விலைமாதர்களுக்கு வரிபோட்டும் மதுவிற்ப தற்கு வரியிட்டும் மன்னன் நாட்டு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்கிறார். கௌடில்லியர், கையூட்டுத்தந்தும், ஏமாற்றியும், ஒழுக்கங்கெட்ட பிறசெயல்களைச் செய்தும், அரசிய லில் வெற்றிபெறலாம் என்கிறார். இந்த இரு நல்லார்களையா வள்ளுவர் முன்மாதிரியாகக்கொண்டு தமது பொருளதிகாரத்தை எழுதியிருப்பார்?

இன்பநூல் வரைந்த வாத்சாயனர் கணவனும் மனைவியும் மனம்போனபடி புணருதற்குத் தாம் கருதும் பலப்பல முறை களைத் தம் நூலில் விவரிக்கிறார். இழிந்தவகையில் இன்பம் பெறவழிகோலுவதாகும் இந்நூல். தெய்வத்தோடு ஒன்றுவதற்கு ஒப்பாகக் காதலர்கள் உள்ளம் உயிர் ஒன்றுபட மன இயல் நூல் எழுதியுள்ள வள்ளுவரையா வாத்சாயனருக்கு மாணாக்க ராக்குவது?

வடமொழி நூல்களில் தருமம்கூறும் அர்த்தகாமத்தைப்பின் பற்றித் திருவள்ளுவர் தமது அறம் பொருள் இன்பத்தை எழு தினார் என்பது அறிஞர்கள் எள்ளி நகைக்கத்தான் பயன்படும். திருக்குறள், காலத்தாலும் இந்த வடமொழி நூல்கள் பலவற் றிற்கு முந்தியதாகும். இது பெருநாவலர் சோமசுந்தரபாரதியா

ரது திருக்குறள் கால ஆராய்ச்சியிலிருந்து இனிதுபோதரும். எனவே, திருக்குறள், வடமொழி நூற்செய்திகளையே திரித்து எழுதிவைத்துக்கொண்ட ஒரு நூல் என்னும் காரணத்தைப் புகுத்தி, குறள்நூலுக்கு மாசு கற்பிக்க முயலுபவர் முயற்சி, முயலுக்குக் கொம்பு உண்டு என்று வாதாடுபவர் வாய்ச்சொல் போன்றதேயாகும்.

கடைசியாகத், திருப்பாவைபாடிய தெய்வத்தமிழ்ச்செல்வி ஆண்டாள் நாச்சியாரே, திருக்குறளை, நோன்புக்காலத்தில் ஓதக் கூடாது என்று தமது பாவைப் பாட்டிலே அறிவுறுத்தினர் என்னும் பேச்சு, மிகஅண்மையிலே குறளுக்கு மாசு கற்பிக்க முயன்ற முயற்சிகளின் அணிவரிசையில் மணிமகுடம் போன்ற தாகும். 'தீக் குறளைச் சென்றோதோம்' என்று அருட்பிராட்டியார் திருவாய்மலர்ந்த சொற்களுக்கு உண்மையிலேயே பொருள் புரி யாமலோ அல்லது புரிந்தும் வேண்டும் என்றே, செய்த அசட்டு வீர முயற்சியாகும் இது:

வள்ளுவர் கொள்கைகளுக்கு நேர்மாறான கொள்கைகளை ஆதரிப்பவர் கூட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. முதலில் அக்கொள்கைகளைப்பற்றிக் கொண்டிருந்தவர்களில் பலர் காலச்சூழற்சியில், அவற்றைக் கைவிட்டு, வள்ளுவரின் கருத்த மையைப் போற்றி வருகின்றனர். வடமொழி நம் எல்லோரது பொது மொழியாக இருக்க, அதனைத் தம்மது என்றே தனியே ஒதுக்கி வைத்துக் கொண்டு, அதில் கூறியவை என்பதனாலேயே சில பொருந்தாக் கொள்கைகள் மேலானவை என்று கருதிக் கொண்டிருந்தவர்களில் பலர் வள்ளுவர்கொள்கையின் சிறப்பினை ஏற்றுக்கொண்டு விட்டனர். போக இன்று மிகமிகச் சிலரே குறள் நெறிக்கு மாறுபட்டவர்களாக இருக்கின்றனர். எனவே இக்கட்டுரையில் கூறிய செய்திகளை அவர்கள் பரபரப்பில்லாமல் அமைதியாக ஆராய்ந்து பார்ப்பார்களேயானல், இனிமேல் குறளுக்கு மாசு கற்பிக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் எவருமே இருக்கமாட்டார்கள். திருக்குறள், எதிர்காலஞானிகவிஞர்மன்னர் பாரதியார் கூறியது போல, உலகத்து வழிகாட்டும் ஒரே ஒப் பற்ற நூலாக விளங்கும் என்பது திண்ணம்.

# பழந் தமிழர் பண்புசால் வாழ்க்கை

திரு. கா. பாக்கியரத்தினம், F. R. G. S., F. R. E. S.,
கொழும்பு.

தமிழ் மக்களது தொன்மையைச் சுட்டுதற் கெழுந்த பழம்பாட்டொன்று,

"கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே வாளோடு
முன் தோன்றி மூத்தகுடி" எனக் கூறுகின்றது.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று" என்றும் குறளுரையில் "பழங்குடி" என்பதற்கு விளக்கம் தருங்கால் ஆசிரியர் பரிமேலழகர் "பழங்குடியாவது தொன்று தொட்டுச் சேர சோழ பாண்டிய ரென்றாற் போலப் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வருங்குடி" என எழுதியுள்ளார். இத்துணைப் பழமை வாய்ந்த தமிழ் மக்கள் தம் அற்றைநாள் தேய்விலாத் தூய நல் வாழ்க்கையை "ஆடி நன்னிழலில் நீடிருங் குன்றம் காட்டுவார் போல்" காட்டுவன அக்காலத் தெழுந்த முதிர்ந்து திருந்திய அருந்தமிழ்ச் செய்யுட்கள். இச் செய்யுட்களில் பல நீரினும், நெருப்பினும், போரினும் அழிந்துபோயின எஞ்சிய சிலவும் துஞ்சிய நம்மவர் மடியும் மறப்பும் மடிய விட்டன. இன்றெமக்குக் கிடைத்தவற்றுள் காலத்தால் பழமையானவை தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியன. தொல்காப்பியன் நூலின் தொன்மையையும், முப்பாலின் முதுமையையும் மறுப்பவர்களும், பாட்டு, தொகை இவற்றின் பழமையை மறுத்திலர். பாட்டிலும் தொகையிலும் உள்ள பாடல்களிற்பல, தொல்காப்பியன் நூலிலும் தொன்மை யானவையென்பது அறிஞர் பலர் முடிவு.

பழந்தமிழ் நாட்டில் மிகுந்த கல்வியும், திரண்ட செல்வமும் ஒருங்கே பெருகி மண்டிக்கிடந்தன. செல்வமும் புகழும்

சிறக்க வாழ்ந்தனர் பழந்தமிழர். அறனறிந்த மூத்த அறிவும் அகன்றுழ்ந்த அறிவுநூல் வளமும் நிறைந்து நின்றவர்; ஊழையும் உப்பக்கங்காணும் உலைவிலா ஊக்கமும் "திரைகடலோடியும் திருவினைத் தேடித்" தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து மகிழும் ஆக்கமும் படைத்தவர்; ஒழுக்கமே உயிரினுமோம்புற்குரியதென உணர்ந்து வாழ்ந்தனர்.

பருப் பொருள்களைக் காண்டற்குக் கருவியாக மக்கட்கமைந்த புறக்கண் போலப் புறக்காட்சிக்குப் புலனாகா நுண்பொருள்களையறிந்து தெளிதற்குரிய அகக்கண்ணமைதலின்றியமையாதது. இவ்வகக்கண் யாதாயிருக்கலாமென வினவுவார்க்கு விடையாகமூதறிவாளர்பலர் ஒருமுகமாய் மொழிந்துளதொன்று. அஃது கல்வி யென்பதை,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்பதனுலுணரலாம்.

பழந் தமிழர் கல்விக்கு முதலிடம் கொடுத்தனர்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறம் 183)

கற்றறிந்தோருக்குத் தலைமையும் மதிப்பும் மிகவும் கொடுத்தனர்.

கல்வி கரைபுரண்டோடிய பழந் தமிழ்நாட்டில், கற்றுரைச் சனம்பண்ணிய பழந்தமிழ்நாட்டில் எண்ணில் புலவர் இருத்தல் இயல்பே. பாடல் புனைவதொன்றே தம் தொழிலெனக் கருதியவர்களல்லர் பழந்தமிழ்ப் புலவர். வயிற்றுப் பாட்டிற்கு வழி காண்பதே வாழ்க்கை; அதற்காகப் பாடிப்பிழைப்பதே தம் தொழிலென்பதை விடுத்துத், தவறுகண்ட வழி, அத்தவறு செய்தவன் நாடாள் வேந்தனே யெனினும், அவன் வேந்தன்; தமக்கு வேண்டும் பொன்னும் பொருளும் அளித்துப்புரப்பவன். ஆகவே அவனைக் கடுஞ்சொற்கூறிக் கண்டிப்பதா என நினையாது இடித்துக்கூறி நல்வழிப் படுத்துவது தம் கடமையெனக் கொண்டவர்.

"ஒருதிசை யொருவனே யுள்ளி நாற்றிசை
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" (புறம் 121)

என மன்னனையும் இடித்துரைக்கும் புலவர் மாண்பினைக் காண்கின்றோம்.

பொன்னையும் பொருளையுமிரந்து நின்றவரல்லர் புலவர் என்பதனைப் பின்வரும் அடிகள் காட்டுகின்றன.

"அறிவும் புகழுமுடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
மரங்கொஃ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினு மத்திசைச் சோறே" (புறம் 206)

தாம்பெற்ற செல்வம் பிறரும் பெறுகவென வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதனை,

"கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர்வறுமை நோக்கின் றவன்கை வண்மையே"

எனப் புறம் (141) பகர்கின்றது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" எனுங் குறட்பாவுக்கு இலக்கியமாயமைந்தவர்கள் என்பதைப் புறம் (216) கூறுகிறது.

பழந் தமிழ் மக்கள் கற்றதைக் கசடறக் கற்றனர். கற்ற வழி நின்றனர். கல்வியால் முதிர்ந்தகன்றமழ்ந்த அறிவும், பரந்த பார்வையும், திருந்திய நோக்கமுமுடையவர் என்பதை

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பாடல் இனிது விளக்குகிறது.

புனல் பரந்து பொன்கொழித்த பழந்தமிழ்நாட்டில், செல்வமும் புகழும் சிறக்க வாழ்ந்தனர் தமிழர். அற்றைத் தமிழ்நாட்டின் சீரும் சிறப்பும், நேரிலா வளமும் யாண்டுமிலாத் தேக்கொடு அகிலும் தென்கடல் முத்தும் உப்பொடு உவப்புறு உணவுப் பண்டமும் ஒப்பில் உடைகளும் உலகமெங்கணும் நிலவின.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த வாரமு மகிலும்
தென்கடல்முத்தும் குணகடற் றுகிருங்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமு

மரியவும் பெரியவும்" மண்டிக்கிடந்த செல்வத் தமிழ் நாட்டில் தமிழர் அலைப்பின்றிக் கவலையின்றி அமைதியாய்ப் பெருவாழ்வு வாழ்ந்தனர்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்" (புறம் 191) எனும் பாட்டு, பண்டைத் தமிழரின் கவலையிலா வாழ்வை எடுத்துக் காட்டுகிறது.

அமைதியும் செல்வமு மளவின்றித் தன்னுட்டகத்தே பகைவரால் அலைப்பின்றி அமைதியாய் வாழ்ந்த பழந்தமிழர் போரினையும், போர் வென்றியையும் தன்னில்லம், மானம், இவற்றைக் காக்கும் பொருட்டே மேற்கொண்டனரன்றிப் பிறர் நாடு கவர்வதற்காகவோ, பிறரைத் தம் ஆணைக்கீழ்க் கொண்டுவரு வதற்காகவோ மேற்கொண்டாரில்லை. அவர் நிகழ்த்திய போர் அறப்போர். தூதுபோக்கி, முன்னறிவித்தல் கொடுத்தே போர் நிகழ்த்தினர் என்பதை,

"ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்" (புறம் 9) என்னும் பாடல் தெளிவுறுத்துகிறது.

பழந்தமிழர் பிறப்பாலே நன்னம்பிக்கையாளர், மகிழ்வும் களிப்பும் நிரம்பியவர்கள்: வாழ்க்கையின் நல்லியல்பைக் களிப்புடன் கைக்கொண்டு நிலவுலகில் இனிய குடும்ப வாழ்வைவிரும்பி அறத்தொடு பொருந்தும் இன்ப வாழ்க்கையையே என்றும் வேண்டினவர்.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் 187)

தமிழ் வாழ்க! தமிழ் மக்கள் வாழ்க!!

# பௌத்த மதமும் திருக்குறளும்

—-*—-

திரு. மயிலை, சீனி வேங்கடசாமி,
சென்னை.

ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் மதக் கருத்துகள் திருக்குறளில் உள்ளன என்று கூறுகின்றனர். சைவ வைணவ கிருத்துவ சமண இசுலாமியமதத்தவர் தம்தம் மதக்கொள்கைகள் திருக்குறளில் காணப்படுகின்றன என்பதைக் காட்டியுள்ளனர். எல்லாச் சமயத்துக்கும் பொதுநூலாக விளங்குகின்ற திருக்குறளிலே பல சமயக் கருத்துகளும் காணப்படுவது இயல்பே: பௌத்த சமயக் கருத்துகளும் திருக்குறளில் காணப்படுகிறதை இங்கு ஆராய்ந்து காண்போம்.

பௌத்த மதம் கி. மு. மூன்றும் நூற்றாண்டிலே, அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் அசோக சக்கரவர்த்தினாலேயே தமிழகத்திலும் இலங்கைத் தீவிலும் பரவிற்று. பௌத்த மதம் தமிழகத்துக்குவந்தபின்னர், ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுக்குப் பிறகு, திருவள்ளுவர் தோன்றித் திருக்குறளை இயற்றினார். அவர் காலத்தில் பௌத்த மதம் தமிழ்நாட்டிலே பரவியிருந்தபடியால் அவர், பௌத்த சமயக் கருத்துகளையும் கொள்கைகளையும் அறிந்திருத்தல் கூடும். ஆகவே, பௌத்த சமயக் கருத்துகளும் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இனியத் திருக்குறளில் காணப்படுகிற பௌத்தமதக் கருத்துகளைப் பார்ப்போம்.

திருக்குறள் கடவுள் வாழ்த்து மூன்றும் செய்யுளில்,

> 'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்''

என்னுங் குறள் காணப்படுவது புத்தபகவானுக்குக் கூறப்படுகிற வாழ்த்து என்று கொள்ளலாம்.

மலர்மிசை' ஏகினன் என்பது பகவன் புத்தருக்கும்

பொருந்தும். போதிசத்துவர் மண்ணுலகத்திலே புத்தராகப் பிறந்தபோது ஏழு அடி நடந்துசென்றார் என்றும், அவர் அடியெடுத்துவைத்தபோது தாமரை மலர்கள் தோன்றி அத்திருவடிகளைத் தாங்கின என்றும் பௌத்த மத நூல்கள் கூறுகின்றன. புத்தர்பெருமான் குழந்தையாகப் பிறந்தபோது அநாகாமிக பிரமதேவர்கள் நால்வரும் வந்து அந்தக் குழந்தையைப் பொன்வலையிலே ஏந்திக்கொண்டார்கள் என்றும், அந்தக் குழந்தையை அவர்களிடமிருந்து சாதுர்மகாராஜிகர் என்னும் நான்கு திக்குப் பாலகர்கள் ஏற்றுக்கொண்டு அதை அமைச்சரிடம் கொடுத்தார்கள் என்றும், அப்போது அக்குழந்தை கீழே இறங்கினபோது பாதங்கள் தரையில் படாதபடி தாமரை மலர்கள் தோன்றிப் பாதங்களைத் தாங்கிக்கொண்டன என்றும் அந்தப் பூக்களின் மேலே அக்குழந்தை ஏழு அடி நடந்துசென்றது என்றும் பௌத்த மத நூல்கள் கூறுகின்றன. எனவே பௌத்த மதக் கருத்துப்படிப் பார்த்தால், மலர்மிசை ஏகினான் என்று திருக்குறள் கூறுவது, தாமரை மலர்மேல் ஏழுஅடி நடந்தவரான புத்தரையே குறிக்கிறது என்று திட்டமாகக் கூறலாம் அல்லவா? *

இனிக் கடவுள் வாழ்த்தில் உள்ள இன்னொரு குறளைப் பார்ப்போம்:

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்னும் திருக்குறளில் கூறப்படுகிற "அறவாழி அந்தணன்" என்பவரும், பௌத்த மதக் கருத்துப்படி பார்த்தால், பகவன் புத்தரையே குறிக்கிறது என்று கூறலாம். என்னை?

அறவாழி என்பது தர்ம சக்கரம் என்று பொருள்படும். பகவன்புத்தர் போதித்த பௌத்த தர்மத்துக்குத் (கொள்கைக்கு) தர்ம சக்கரம் என்றும் அறவாழி என்றும் பெயர் உண்டு. புத்தர் பெருமான் போதிஞானம் பெற்று முதன்முதலாகப் போதித்த

---

(* மலர்மிசை ஏகினான் என்பது சமண சமயத்தவரின் அருகக் கடவுளுக்கும் பொருந்தும் என்று நான் முன்பு எழுதியுள்ளதை வேறு கட்டுரையில் காண்க.)

பௌத்த தர்ம போதனைக்குத் தர்மசக்கர பிரவர்த்தனம் என்பது பெயர். "தர்மசக்கரப் பிரவர்த்தன சூத்தம்" என்னும் பெயருள்ள சூத்திரம் பௌத்தத் திரிபிடக நூலில் இன்றும் இருக்கிறது. புத்தர் தம்முடைய தர்மத்தைப் (கொள்கையை) போதித்ததைக் கூறும்போது தர்ம சக்கரத்தை உருட்டிச் சென்றார் என்று கூறுவது மரபு. எனவே தர்ம சக்கரம் என்பதும் அறவாழி என்பதும் புத்தருடைய உபதேசங்களைக் குறிக்கும் சொற்களாம்.

பௌத்தர்கள் புத்தருடைய உபதேசங்களைத் தர்ம சக்கரம் என்றே கூறுவர். அந்தப் புத்த தர்மத்துக்கு வணக்கங்கூறு முகத்தான் அதைச் சக்கரத்தின் உருவமாகவே அமைத்து வணங்கினார்கள். அதற்குத் தரும பீடிகை என்பது பெயர். பௌத்த மத நூலாகிய மணிமேகலை, புத்தர் பெருமானைக் கூறும்போது,

"அற்க்கதிர் ஆழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன்"

என்றும் (மணி. 5: 76—77),

"ஆதிமுதல்வன் அறவாழி ஆள்வோன்"

என்றும் (மணி. 6:11., 10.61) கூறுகிறது. மேலும், இலங்கைத் தீவிலே, இப்போது யாழ்ப்பாணம் என்று கூறப்படுகிற பகுதியிலே அறவாழியாகிய தரும சக்கரத்தின் பீடிகை இருந்தது என்றும்' மணிமேகலை என்னும் பௌத்த பிக்குணி அங்குச் சென்றபோது அந்தத் தரும பீடிகையை வணங்கினாள் என்றும் மணிமேகலை காவியம் கூறுகின்றது. (மணி. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை அடி. 9) இந்தத் தரும பீடிகையை மணிமேகலை காவியம் வேறு இடங்களிலும் குறிப்பிடுகிறது. (மணிமேகலை 25–ஆம் காதை. அடி 63, 133)

பௌத்த மதத்தைச் சேர்ந்திருந்த அசோக சக்கரவர்த்தி, தாம் புத்தருடைய நினைவுக்குறியாக நாட்டிவைத்த தூண்களின் மேலே தருமச் சக்கரமாகிய அறவாழியின் உருவத்தை அமைத்து வைத்தார் என்பதும், அந்தத் தர்ம ச்க்கரத்தின் உருவமே இப்போதும் நமது பாரதநாட்டுக் கொடியில் அமைந்துள்ளது என்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

எனவே, தருமச் சக்கரமாகிய அறவாழியை யுடையவன் புத்த பகவான் என்பதும், அறவாழி அந்தணன் என்று திருக்குறள் வாழ்த்தியது அந்தப் புத்த பகவானையே என்பதும் தெளிவாகின்றது. *

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்னும் திருக்குறளில் கூறப்படுகிற, பொறிவாயில் ஐந்தவித்தான்" என்பவரும் புத்த பகவனையே குறிக்கிறது. மனிதனாகப் பிறந்த புத்தர் ஏனைய மனிதரைப்போலவே ஐம்பொறி ஐம்புலன்களைப் பெற்றிருந்து, பின்னர்த் தமது தவத்தினாலும் அறிவாற்றலினாலும் ஐம்புலன்களையும் அடக்கி அவித்துப் போதிஞானம் பெற்றுப் புத்தரானார். பொறிவாயில்களை அவிக்க வேண்டுமானால், அப்பொறி வாயில்களைப் பெற்றிருக்கவேண்டும். இயற்கையாகவே பொறிவாயில்கள் இல்லையென்றால் அவற்றை அவிக்கவேண்டிய வேலையே இல்லை. எனவே, பொறிவாயில் ஐந்தவித்தான் என்பது, பௌத்த மதக் கருத்துப் படி, ஐம்பொறிகளைப் பெற்றிருந்து, பின்னர் அவற்றை அவித்து உயர்நிலையடைந்த புத்தரையே குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. *

பௌத்த மத நூல்களில் சிறந்ததென்று கருதப்படுவது தம்மபதம் என்னும் நூல். தம்மபதத்தில் காணப்படுகிற சில கருத்துகள் திருக்குறள் கருத்துக்கு ஒத்திருக்கின்றன அவற்றுள் சிலவற்றைக் காண்போம் தம்மபதத்தில் தம்மவக்கோ என்னும் பிரிவில் 10, 11-ஆம் செய்யுள்களில் கீழ்க்கண்ட கருத்துக் கூறப்படுகிறது.

---

(* அறவாழி அந்தணன் என்பது சைனரின் அருகக் கடவுளையுங் குறிக்கும் என்று நான் முன்பு எழுதியுள்ள கட்டுரையை வேறு இடத்தில் காண்க.)

(* இது, ஐம்புலன்களைப் பெற்றிருந்து பின்னர் அவற்றை அழித்து உயர்நிலைபெற்ற ஏனைய அருகப்பெருமான் முதலிய பெரியோர்களுக்கும் பொருந்தும்.)

"மனிதர்களில் மிகச் சிலர் மட்டும் பிறவிக்கடலை நீந்தி அந்தக் கரையைப் போய்ச் சேர்கிறார்கள். மற்றப் பெரும்பான்மையோர் இக்கரையிலேயே உழன்று திரிகிறார்கள். ஆனால், தர்மத்தை நன்றாக அறிந்தவர்கள் அந்தத் தர்மத்தின்படி நடக்கிறபடியினாலே, கடத்தற்கு அரிதான சாவு (இறப்பு) என்னும் இடத்தைக் கடந்து அப்பால் இருக்கிற மறுகரையைச் சேர்கிறார்கள்" என்று கூறுகின்றன.

இந்தப் பௌத்த மதக் கருத்தைத் திருக்குறள்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

என்னும் திருக்குறளில் கூறுகிறது.

பிறப்பு இறப்பு என்னும் நிலையில் மாறிமாறி உழன்று வருந்துகிறது உயிராகிய ஆன்மா. இதற்குச் 'சம்சாரம்' என்பது பெயர். இறைவனாகிய புத்தர்பெருமான் கூறிய தருமப்படி நடப்பார்களானால், பிறவி என்னும் பெருங்கடலை நீந்தி அக்கரையாகிய வீடுபேற்றைக் காண்பார்கள் என்று மேலே காட்டிய தம்மபதத்தின் கருத்து முழுவதும் இந்தத் திருக்குறளில் அமைந்திருப்பது காணலாம். *

தம்மபதம், தண்டவக்கோ என்னும் பிரிவின் 5-ஆம் செய்யுள், கடுஞ்சொற்களைப் பேசக்கூடாது என்றும் இன்சொல்லைப் பேசவேண்டும் என்றும் கூறுகிறது. "கடுஞ்சொற்களைக் கூறாதே. கடுஞ்சொல்லால் கூறப்பட்டவர் உன்னையுங் கடுஞ்சொற்களாலே பேசுவர். சினந்து பேசிய கடுஞ்சொற்கள் பிறரைத் துன்புறுத்துகிறபடியினாலே அவை உன்னையுந் துன்புறுத்தும்." ஆகையினாலே, இன்சொல் கூறுக என்று அது கூறுகிறது. இக்கருத்தையே திருக்குறள்,

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"

(* இது சமண சமயத்தவரின் அருகக் கடவுளுக்கும் பொருந்தும். அருகப் பெருமான் தீர்த்தங்கரர் என்று கூறப்படுகிறார். அதாவது பிறவியாகிய வெள்ளத்தைக் கடந்தவர் என்பது பொருள்)

என்று சுருங்கச்சொல்லி விளங்கவைக்கிறது.

பிறன்மனை நயவாமை என்னும் அதிகாரத்தில், பிறர் மனைவியை விரும்புகிறவனுக்கு நான்குதீமைகள் உண்டாகின்றன என்று திருக்குறள் கூறுகிறது.

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்"

என்பது அந்தக் குறள்.

இதே கருத்தைத் தம்மபதம் நிரயவக்கோவின் 4-ஆம் செய்யுள் கூறுகிறது. "பிறன் மனைவியைச் சேர்கின்ற அறிவில்லாதவனுக்குப் பாவம், அச்சம் (மனஅமைதி இன்மை) பழி, நகரம் என்னும் நான்கும் கிடைக்கும்" என்று அது கூறுகிறது. திருக்குறள் கருத்தும் தம்மபதக் கருத்தும் ஒத்திருக்கிறது.

தம்மபதம், புத்தவக்கோ என்னும் பிரிவு துறவிகளின் கடமையைக் கூறுகிறது. அப்பிரிவின் ஆறும்செய்யுள் "துன்பத்தைப் பொறுமையோடு பொறுத்துக்கொள்வது உயர்ந்த தவம் ஆகும். அறிவுள்ளவர் நிர்வாண மோட்சத்தை மிக உயர்ந்த நிலை என்று கருதுகிறார்கள். பிறருக்கு வருத்தத்தைத் தருகிறவன் துறவியாகமாட்டான். பிறருக்குத் துன்பத்தை உண்டாக்குகிறவனும் துறவியாக மாட்டான்" என்று கூறுகிறது. இதே கருத்தைத் திறக்குறள் சுருக்கமாகவும் விளக்கமாகவும்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்று கூறுகிறது.

தம்மபதம் பிராமணவக்கோ 27-ஆம் செய்யுள் கள்ளாமையைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. "இந்த உலகத்திலே பிறருக்குரிய பொருளை—அது நீளமாக இருந்தாலும் குட்டையாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும்—தனக்குக் கொடுக்கப்படாத அந்தப் பொருளை எவன் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறானோ, களவாடாமல் இருக்கிறானோ அவனை நான் பிராமணன் என்று கூறுவேன்."

இக்கருத்தையே திருக்குறள் கள்ளாமை என்னும் அதிகாரத்தில்,

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு"

என்று கூறுகிறது.

நாவடக்கத்தைப் பற்றித் தம்மபதம், கோதவக்கோ 12-ஆம் செய்யுள் பேசுகிறது. கடுஞ்சொல் கூறுமல் நாக்கை அடக்கிக் காக்க வேண்டும் என்றும் தீயசொல் பேசாமல் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் நாவினல் பாவம் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டு நல்ல சொற்களையே பேச வேண்டும் என்றும் அது கூறுகிறது. இக்கருத்தையே திருக்குறளும்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று கூறுகிறது.

"ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்ருகா தாகி விடும்"

என்றும் கூறுகின்றது.

திருக்குறளும் தம்மபதமும் அகிம்சையைப் பற்றிக் கூறுகின்றன. தம்மபதம், தம்மட்டவக்கோ 15-ஆம் செய்யுள் "பிராணிகளுக்கு இம்சை செய்கிறவன் உயர்ந்தவன் அல்லன். அகிம்சையுள்ளவன் அதாவது பிறஉயிர்களைக் கொல்லாதவன் உயர்ந்தவன் ஆவான்" என்று அச்செய்யுள் கூறுகிறது. இதே கருத்தைத் திருக்குறள், சுருக்கமாகவும், விளக்கமாகவும்

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

என்று கூறுகிறது.

துறவிகளைப் பற்றியும் தம்மபதமும் திருக்குறளும் பேசுகின்றன. "துறவிகள் வேடத்தையும் உருவத்தையும் அமைத்துக்

கொள்வதனுலேயே துறவிகள் ஆகார். மனத்தூய்மையே துறவு ஆகும்'' என்று திருக்குறள் கூறுகின்றது.

> ''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்தது ஒழித்து விடின்''

என்பது திருக்குறள். இக்கருத்தையே தம்மபதம் தண்டவக்கோ 13–ஆம் செய்யுள் கூறுகிறது. 'ஆடையில்லாமல் அம்மணமாக இருப்பதும், சடையை வளர்த்துக் கொள்வதும், அழுக்குஉடம் போடிருப்பதும், கடும்பட்டினி கிடப்பதும், தரையில் படுக்காம லிருப்பதும், உடம்பு முழுவதும் நீறுபூசிக் கொள்வதும் அசையாமல் அமர்ந்திருப்பதும் ஆகிய இவை எல்லாம் மெய்ஞ்ஞானந் தரா'' என்று தம்மபதம் கூறுகின்றது.

அவாவறுத்தலைப் பற்றித் திருக்குறள் கூறுவதுபோலவே தம்மபதமும் கூறுகின்றது. தம்மபதம், தணுவக்கம் 3, 4–ஆம் செய்யுள்கள் இவ்வாறுகூறுகின்றன. ''அடக்குவதற்கு அரியதான கொடிய அவாவை அடக்கி வென்றவன், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் விழுந்துவிடுவதுபோல, துன்பங்கள் தன்னை ஒட்டாதபடி வீழ்த்திவிடுகிறுன்'' என்றும்,

''ஆற்றங்கரையில் உள்ள சிறுசெடிகளைப் பெருவெள்ளம் அரித்துவிடுவதுபோல, மாரன் (சாவு) உங்களை அழித்துவிடாதபடி உசிரக்கிழங்கைப் பெறுவதற்காகப் பீரணபுல்லை அடியோடு பிடுங்கிவிடுவது போன்று, உங்களிடமுள்ள அவாவை (ஆசைகளை) அடியோடு அகழ்ந்து எறியுங்கள்'' என்றும் கூறுகின்றன. இக்கருத்தையே திருக்குறளும் கூறுகின்றது.

> ''அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
> தவாஅப் பிறப்பீனும் வித்து''

என்றும்

> ''இன்பம் இடையறுது ஈண்டும் அவாவென்னும்
> துன்பத்துள் துன்பம் கெடின்''

என்றும்,

"ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்றும் கூறுவது காண்க.

தீயவர் நட்புக் கூடாது, நல்லவர் நட்புவேண்டும் என்று திருக்குறளும் தம்மபதமும் கூறுகின்றன. தம்மபதம் பண்டித வக்கோ 3-ஆம் செய்யுள், "தீமை செய்கிறவர்களுடனும் வெறுக்கத்தக்கவருடனும் சேராதே. நல்லொழுக்கமுள்ளவர்களுடனும் நல்லவர்களுடனும் சேர்ந்திரு" என்றும்,

தம்மபதம் சுகவக்கோ 11-ஆம் செய்யுள் "மூடர்களுடன் சேர்வது பெருந்துன்பத்தைத் தருகிறது. மூடர்களுடன் சேர்ந்திருப்பது, (பகைவரைச் சேர்ந்தவர் துன்பம் அடைவதுபோல) துன்பத்தையே கொடுக்கிறது. அறிஞர்களுடன் சேர்ந்திருப்பது (உறவினரைச் சேர்ந்தவர் இன்பம் பெறுவதுபோல) இன்பத்தையே கொடுக்கிறது" என்றும் கூறுகின்றன. திருக்குறளும் இக்கருத்தையே,

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்"

என்று திட்பநுட்பமாகக் கூறுகிறது.

தம்மபதம், அத்தவக்கோ 2-ஆம் செய்யுள், "ஒவ்வொருவரும் தம்மை நல்வழியில் நிறுத்திக்கொண்டு பிறரையும் நல்வழியில் நிறுத்தவேண்டும். இப்படிச் செய்யும் அறிவாளி துன்பம் அடையமாட்டான்" என்று கூறுகிறது. திருக்குறளும் இக்கருத்துக்கு ஒன்றியே,

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து"

என்று கூறுகிறது.

அருளுடைமையைப் பற்றித் தம்மபதம், பிக்குவக்கோ 9-ஆம் செய்யுள், "அருளும் அமைதியும் உடையவராய்ப் பௌத்த தர்மத்தில் நடக்கும் பிக்கு (துறவி) மன அமைதிபெற்று மகிழ்ச்சியோடு வாழ்கிறார்" என்று கூறுகிறது. திருக்குறளும் அருளுடைமையைப் பற்றி,

"நல்லாற்றுன் நாடி அருளாள்க பல்லாற்றுன்
தேரினும் அஃதே துணை"

என்று பேசுகிறது.

தம்மபதம், யமகவக்கோ 11-ஆம் செய்யுள், "பொய்ம்மையில் மெய்ம்மை இருப்பதாகக் கருதிக்கொண்டும், மெய்ம்மையில் பொய்ம்மை இருப்பதாகக் கருதிக்கொண்டும் இருக்கிறவர்கள் உண்மைகாண மாட்டார்கள். இவர்கள் தவருன கருத்துள்ளவர்கள்" என்றும், 12-ஆம் செய்யுள், "மெய்ம்மையை மெய்மையாகவும் பொய்மையைப் பொய்மையாகவும் காண்கிறவர்கள் நல்ல செம்மையான கருத்துள்ளவராக இருக்கிருர்கள்" என்றும் கூறுகின்றன. இந்தத் தம்மபதக் கருத்தையொட்டியே திருக்குறள்,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்று கூறுகிறது.

தம்மபதம், சகஸ்ஸவக்கோ 1, 2, 3-ஆம் செய்யுள்கள் பயனில்லாத சொற்களைப் பேசக்கூடாதென்று கூறுகின்றன. "பொருள் இல்லாத ஆயிரம் சொற்களைக் கூறுவதைவிட அமைதியையளிக்கின்றபொருள்பொதிந்த ஒரே ஒரு சொல்மேலானது" என்றும் "பொருள் இல்லாத சொற்களை அமைத்து ஆயிரம் செய்யுட்களை இயற்றுவதைவிட, மன அமைதியைத் தருகிற பொருள் பொதிந்த ஒரே ஒரு செய்யுளை இயற்றுவது மேலானது" என்றும் "பொருளுணராமல் நூறு செய்யுட்களை ஓதுவதைவிட அமைதியைத் தருகின்ற ஒரு செய்யுளைப் பொருளுணர்ந்து ஓதுவது மேலானது" என்றும் கூறுகின்றன. இக்கருத்தையே திருக்குறள்,

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்று தவர்"

என்று கூறுகிறது.

மணிமேகலை என்னும் பௌத்தமதக் காவியம் சார்பு என்னும் பௌத்த சமயத் தத்துவத்தைக் கூறுகிறது. "சார்பில் தோற்றம்" என்றும், (மணி. 21: அடி 168) "சார்பிற் ருேற்றமும்

சார்பறுத்துய்தி'' என்றும் (மணி. 25, அடி 5), "தலைச்சேவகனுய்ச் சார்பறுத் துய்தி'' என்றும் (மணி. 21: அடி 179)

"இறந்த காலத் தெண்ணில் புத்தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்த
ஈராறு பொருளின் ஈந்தநெறி யுடைத்தாய்ச்
சார்பிற் றோன்றித் தத்தமின் மீட்டும்''

என்றும் (மணி. 30 அடி 14—17) வருவன காண்க.

சார்பு, சார்வு என்றுங் கூறப்படும், பௌத்த மதத் தத்துவத்தைச் சேர்ந்த பன்னிரு சார்புகளும் மணிமேகலையில் கீழ்க்கண்டவாறு கூறப்படுகின்றன.

''பேதைமை சார்வாச் செய்கை யாகும்
செய்கை சார்வா உணர்ச்சி யாகும்
உணர்ச்சி சார்வா அருவுரு வாகும்
அருவுருச் சார்வா வாயில் ஆகும்
வாயில் சார்வா ஊறா கும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சி யாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கை யாகும்
வேட்கை சார்ந்து பற்றா கும்மே
பற்றிற் றோன்றுங் கருமத் தொகுதி''

என்று பன்னிரண்டு சார்புகளையும் மணிமேகலை (30-ஆம் காதை. அடி 104—112) கூறுகின்றது. இந்தப் பன்னிரண்டு சார்புகளும் கெட்டால் அல்லாமல் வீடுபேறு பெறமுடியாது என்பது பௌத்த மதச் சித்தாந்தம் இந்தச் சார்புகளைத் திருக்குறளும் கூறுகிறது. மெய்யுணர்தல் என்னும் அத்தியாயத்தில்,

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்''

என்று திருக்குறள் கூறுவது காண்க.

பௌத்த மதச் சார்புகொண்டு இத்திருக்குறளை நோக்கும் போது, பௌத்த மதத் தத்துவங்களாகிய பன்னிரு சார்புகளை மனத்துள் கருதிக்கொண்டே திருவள்ளுவர் இத்திருக்குறளை அமைத்தாரோ என்று கருதத் தோன்றுகிறது.

பௌத்தமதச் சார்பாகத் திருக்குறளில் காணப்படுகிற சில கருத்துகளை இங்கே ஒருவாறு ஆராய்ந்தோம். இதில்,

"குணம்நாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

அறிஞர் கடமையாகும். ஏனென்றால்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்றும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்றும் திருக்குறளே கூறுகின்றது அல்லவா?

---

குறிப்பு:— 9—7—67-இல் நடைபெற்ற மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழாத் திருக்குறட் கருத்தரங்கிற் படிக்கப்பெற்றது.

# பத்தெனும் பாவழகு

—-✻—-

திருமதி. அ. காமாட்சி குமாரசாமி, எம், ஏ.,

தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் கல்லூரி, சேலம்.

நமது நாட்டில் நுழைந்துவரும் இக்காலப் புதுமைகளுள் ஒன்று பத்தெனும் எண்ணல் முறை (Decimal System) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளெல்லாம் பத்தின் பெருக்கலாய் அமையும் முறைக்கு மாறிவரும் காலமிது. இதனாற்படித்தாரும், பாமரரைப்போன்றே சற்று மருட்சியடையும் நிலையுமுண்டு. எனினும், உலகின் ஒருமைக்காகவும், எண்ணல் எளிமைக்காகவும் இப்புதிய மாற்றம் ஏற்கப்படுகின்றது. இங்ஙன்ம் புதிதாய்ப் புகுந்துவரும் பத்தெனும் அழகு, நமது தமிழிலக்கியங்களிலும் மிகப் பழங்காலந்தொட்டே இருந்துவரப் பார்க்கின்றோம்; இறும்பூதெய்துகின்றோம்.

முதன்முதலாகப் பத்தெனும் பாவழகினைத் தமிழிலக்கியத்திற்குப் புகுத்தியவர் வள்ளுவப் பெருந்தகையே யாவர். ஒவ்வோரதிகாரத்திற்கும் பப்பத்துக் குறட்பாக்களாகத் தமது நூலினையமைத்தார். கல்வி, நட்பு, நல்குரவு, பகை, போன்ற சிறந்த பொருள்களைப்பற்றிக்கூறிமுடிக்கப்பத்துக்குறட்பாக்கள் போதா, எனவே, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை: நட்பு, நட்பாராய்தல், கூடாநட்பு; நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை; பகைத்திறந்தெரிதல், பகைமாட்சி, என்று தலைப்பினைச் சற்று மாற்றிக்கொண்டு, பத்தெனும் பாவழகை மாற்றுமலிருப்பர். இங்ஙனம் இவர்கண்ட பத்தெனும்பாவழகினைப் பன்மடங்காய்ப் பெருக்கியும்விரித்தும், பிற்காலப்பாவலர் பற்றுவாராயினர். சங்கவிலக்கியங்களிலும் பத்துப்பாட்டெனும் தொகுப்பைக் காண்கிறோம். இடைக்காலத்திலும் பத்துப்பாடல்களைக்கொண்ட பதிகங்கள் எண்ணற்றுத்தோன்றின. தேவாரத்திருத்தாண்டகங்கள் பதிகங்களே. பிரபந்தத்திற் பதிகங்கள். திருவாசகத்திலும் அடைக்கலப்பத்து, பிடித்தபத்து, வாழாப்பத்து. போன்ற பல்

வகைப் பத்துக்கள் உள. பதிகப்பாடல் பத்தினையும் அந்தாதித் தொடையால் அமைத்துப்பாடும் நூல்வகை பதிற்றந்தாதி யாயிற்று. அகவல் வெண்பா அல்லது கலிப்பா பத்தாய்ப் பாடுவது ஒரு பா ஒரு பஃது. நூலுக்குரிய, சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தல் முதலான அழகுகள் பத்து. நூலில் தவிர்க்கவேண்டிய கூறியது கூறல், மிகைபடக் கூறல் முதலான குற்றங்களும் பத்து. பாவலர்பாடும் காவலர்க்குரிய அங்கங்களும் பத்து.

இவ்வாறு தொடங்கிய பத்தெனும் பாவழகு படிப்படியாப் —பப்பத்தாய்ப்— பெருகிற்று. பிற்காலச் சிற்றிலக்கியங்கள் இவ் வழகினைப் பெரிதும் பின்பற்றின. வெண்பாயாப்பில் பத்துப் பாடல்களும் கலித்துறையிற் பத்துமாக மாறிமாறி யமைந்த இரட்டைமணிமாலை 20 பாடல்களாலாயது. ஒரு பா ஒரு பஃது போன்று, இரு பா இரு பஃதும் எழுந்தது. ஆசிரியப்பாவிற் பத்தும், வெண்பாவிற் பத்தும், கலித்துறையிற் பத்துமாக மாறி மாறி வரும் மும்மணிக்கோவை 30 பாடல்களாலாயது. மூவடி முப்பதும் பழம்பெரு நூலாகும். அறுபத்துநான்கு கலையினையும் அழகுறக் கூறும் ஒலியந்தாதி 30 பாடல்களாய் அமையும். வெண் பாவிற் பத்தும், கலித்துறையிற் பத்தும் ஆசிரிய விருத்தத்திற் பத்தும், அகவலிற் பத்துமாக, அழகுற அடுத்தடுத்து அமையும் நான்மணிமாலை எனும் நூல்வகை 40 பாடல்களால் ஆகும். இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, என்ற நானாற்பதினையும் நன்கறிவோம். அன்பில் ஐந்திணையுள், திணைக்குப் பப்பத்துப் பாடல்களாய் அமைந்த நூல்கள் ஐந்திணை ஐம்பது. திணைமொழி ஐம்பதாகும். வெண்பாவில் இருபது பாடல்களும், கலித்துறையில் நாற்பது பாடல்களும் ஆகப் பாடப் பெறும் மணிமாலை எனும் நூல்வகை 60 பாடல்களால் ஆயது. பொழுது ஒன்றினுக்குப் பத்து நாழிகையாக ஆறு சிறு பொழுதும் சேர்ந்த நாளின் நாழிகைகள் 60. ஆறுபெரும் பொழுதினைக் கொண்ட ஆண்டுகள் 60, ஏரெழுபது, சிலையெழுபது போன்ற நூல்கள் 70 பாடல்களால் ஆயவை. பாவகைகளுள் பெயரின் னிசை ஊரின்னிசை, பெயர் நேரிசை, ஊர் நேரிசையென்ற சிற்றிலக்கியங்கள் 50, அல்லது 70, அல்லது 90 பாடல்களால் அமைவன 100பாடல்களைக்கொண்ட நூல்களோ எண்ணிறந்தன.

பெரும்பாலான "மாலைகள்" அந்தாதிகள், அலங்காரம் 100 பாடல்களைக் கொண்டவை. பதகத்திற்கு எதுகையாகச் சதகம் எனப் பெயர்பெற்றன. தொண்டை மண்டல சதகம், குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்ற சதகங்கள் எண்ணிறந்தன பிற்காலத்தில் தோன்றின. இடைக்காலத்துத் திருவாசகத்தில் ஒரு சதகம் பெரும்பகுதியாகும். தமிழ் மொழுக்கே தனிச் சிறப்பாய் அமைந்த பிள்ளைத் தமிழெனும் பிரபந்த வகை பத்துப் பருவங்களைத் தன்னகத்தே யுடையதாய்ப், பருவத்திற்குப் பப்பத்துப் பாடல்களாக 100 பாடல்களைக் கொண்டு பொலியும். பதிற்றுப் பத்து, பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய இரண்டும், 10X10 என 100 பாடல்களைக்கொண்டு அமைவனவாகும்.

அதன்பின்னர் 100 எனும் பாவெண் படிப்படியாய்ப் பெருகியதையும் பார்க்கலாம். பிற்காலத்தே தோன்றிய, இன்னிசை எனும் நால்வகைக்குரிய வெண்பாக்களின் எண்ணிக்கை இருநாறு எனும்நூல் 200 பாடல்களால் ஆனது. தண்டகமாலை 300 ஆகும். 400 பாக்களைக்கொண்ட நூல்களோ பற்பல. அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, நாலடிநானூறு, பழமொழி நானூறு, என்பவை அவை. திணைக்கு நூறு குறுகிய பாடல்களாய். 500 பாடல்களைக் கொண்டு விளங்குவது ஐங்குறுநூறாகும். முடியுடை மூவேந்தரைப்பற்றிய நூல் முத்தொள்ளாயிரமாகும்.

நூறு, ஆயிரமாயும் பெருகிற்று. திருவாய்மொழி 1000; தில்லைத்திருவாயிரமும், தெய்வத்திருவாயிரமும் பின்னர்த்தோன்றின வைணவத்திவ்யப் பிரபந்தங்கள் 4000. பின்னர் வந்த முருகதாச அடிகளெனும் தண்டபாணி சுவாமிகளியற்றியது 7000ப் பிரபந்தம். வைணவஉரையாசிரியர்களோ ஆயிரத்தின் பெருக்கலைப் பெரிதும் மேற்கொண்டனர். ஒற்றுநீக்கி 32 எழுத்துக்களாலாயதைப் "படி" எனக் கணக்கிட்டு வைணவப்பிரபந்தங்களுக்கு 3000ப்படி, 6000ப்படி, 9000ப்படி, 12000ப்படி, 24000ப்படி, 36000ப்படிகள் வரை பேருரை இயற்றினர்.

அடுத்த பேரெண்ணை கோடியும் புகுந்தது தமிழ்ப்பாடல்களில் அடிக்கு ஒரு கோடியாக நாலடிகளில் 4 கோடிகளையமைத்

துப் பாடிய ஔவையின் நாலுகோடிப்பாட்டு நாடறிந்ததே. வஞ்யாபதியெனும் காவியத்தலைவனை பெருந்தனவணிகனின் பெயர் நவகோடி (9 கோடி) நாராயணன் என்பதாகும். பாரதியாரின் காலத்து மக்கள் தொகை 30 கோடி. நூல்களிற்குறிக்கப் பெறும் தேவர்களின் எண்ணிக்கை 38 கோடி அண்மையில் கணக்கிடப்பெறும் இக்கால இந்தியமக்களின் எண்ணிக்கை எத்துணைக் கோடியோ!

பேரெண்ணைன கோடியினை ஓரளவையாகக் கொண்டு அடுக்கிக் கூறுவர் அருணகிரிநாதர். பெளதிக இயற்படி, இக்காலத்தும், ஒரு மெழுகுவத்தியொளியின் அடிப்படையில் மின் குமிழ்களின் (Electric bulbs) ஒளி கணக்கிடப் பெறுவதுபோன்று, பேரொளிப்பிழம்பான கதிரவனையே ஓர் ஒளியளவையாகக் கொண்டு தமிழ்க்கடவுளாய — அழகுவாய்ந்த குறிஞ்சி நிலத்தின் அழகுத் தெய்வமான முருகப்பெருமானின் பேரொளியைச் சத கோடி (100 கோடி) சூரியரின் ஒளிக்கு நிகராகுமெனச் சீர்பாத வகுப்பில்' கூறுவர், அவரது திருப்புகழைத் திருப்புகழாற் புகழ்ந்துபாடிய அருணகிரிநாதர்.

எனவே, தமிழிலக்கியங்களில்' தொன்று தொட்டு இன்று வரை பத்து எனும் அளவை, நூறாகி, ஆயிரமாகி, கோடியாகி, சதகோடி வரை செல்வதைப் பார்க்குங்கால், தமிழரின் அமைப் பழகு உணர்ச்சிதான் என்னே! என்று இறும்பூதும் இறுமாப்புங் கொள்ளாமலிருக்க முடியாது.

# காமத்துப்பால் ஆராய்ச்சி

--][--

பைந்தமிழ்ப் பாவலர்
திரு. அ. கி. பரந்தாமனர், M. A., சென்னை.

## திருக்குறளின் பெருமை

கவிதைச் சுவை மிகுதியாகக் குவிந்து கிடக்கும் காமத்துப் பால், உலகத்துக்கு ஒரு நூலாகவும் திருநூலாகவும் பொது மறையாகவும் இருந்துவரும் திருக்குறளின் மூன்ருவது பகுதி யாகும் என்பது யாவரும் அறிந்ததே.

வள்ளுவர் இப்பகுதிக்குக் "காமத்துப்பால்" என்றே தலைப்பிட்டிருத்தல் வேண்டும். இந்நூலில் காமம் என்னும் சொல் 38 இடங்களில் வந்திருப்பதைக் காணலாம். இன்பத்துப்பால் என்று வைத்திருந்தால் பொருள் மயக்கம் ஏற்படும். குறுந்தொகை முதலான சங்க நூல்களில் காமம் என்னும் சொல் பல இடங்களில் வழங்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

## வேறுபாடு

திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரு பால்களில் குறள்களை இயற்றிபமைத்த முறைக்கும் காமத்துப் பாலைப் பாடிய முறைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. முதல் இரண்டு பால்களிலும் தெய்வப்புலவர் வள்ளுவர் அறக்கருத்துக் களையும் முறையே நேரடியாகக் கூறியுள்ளார்; அறவுரையும் அறிவுரையும் வழங்கியுள்ளார். இப்பொது முறைக்கு மாருக ஒரு சில குறட்பாக்களும் உண்டு. அவை படைச்செருக்கு என்னும் அதிகாரத்தில் வரும்.

> "என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
> முன்நின்று கல்நின் றவர்"

என்னும் குறளும்,

"கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

என்னும் குறளுமாகும். 'என்னைமுன்' என்று தொடங்கும் குறள் ஒரு வீரன் கூறுவதுபோல் அமைந்தது. 'கானமுயல்' என்று தொடங்கும் குறளும் ஒரு வீரன் கூறுவது போலவே உள்ளது. நல்குரவு என்னும் அதிகாரத்தில் உள்ள,

1) இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

2) நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

என்னும் இவ்விரு குறட்பாக்கள் வறுமையால் வாடி நலியும் ஒருவன் கூறும் கூற்றுக்களாக உள்ளன இவை தவிர மற்றவை கவி கூறும் கூற்றுக்களாகவே இருக்கின்றன. ஆனால், காமத்துப் பாலில் ஒன்றேனும் கவி கூறும் கூற்றாகவே அமையவில்லை. வள்ளுவர் காமத்துப்பாலை மிகுந்த கவிச்சுவையுடன் நாடக முறையில் தலைவன் தலைவி தோழி இவர்களுள் யாராவது கூறும் கூற்றுக்களாகவே குறட்பாக்களை இயற்றியுள்ளார்: இக்காமத்துப்பால் பாலுணர்ச்சியைத் தூண்டுவதாக இல்லை மற்ற இருபால்களைவிட இக்காமத்துப்பாலில்தான் வள்ளுவருடைய கவிதையுணர்ச்சியையும் கற்பனைத் திறனையும் அற்புதமாக் காண்கிறோம் (காமத்துப்பாலில் திருவள்ளுவரே காதலனாகவும் காதலியாகவும் செவிலியாகவும் நடித்திருக்கிறார் என்று கூறலாம்)

## காமத்துப்பால் நுதலும் பொருள்

திருவள்ளுவர் தமிழ்நெறியைப் பின்பற்றி உரிப்பொருளை மட்டும் பயன்படுத்திப் பரத்தையின் பிரிவைக் கூறாமல், காதற் கதையாகக் காமத்துப்பாலை அமைத்திருக்கும் சிறப்புத் தனிச் சிறப்பாகும். உருவும் திருவும் பிறவும் ஒத்த தலைவனும் தலைவியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தற்செயலாக ஒருவரை ஒருவர் கண்டு காமுற்றுக் களவுப் புணர்ச்சியில் இன்புற்றுத் தோழியின் துணைகொண்டு அக்களவு ஒழுக்கத்தில் ஒழுகிப் பின்பு மணம்புரிந்து வாழும்பொழுது, தலைவன் தனக்குரிய

கடமையை நிறைவேற்றப் பிரிய, அப்பொழுது காதலர் இருவரும் பிரிவுத் துயரால் வாடிப் பின்பு ஒன்றுபட்டு நிற்க, ஏதேனும்ஒரு காரணத்தால் தலைவி ஊடிநிற்க, அதனால் தலைவன் வருந்தி ஊடலை உணர்த்திக்கூடி முன்னையினும் மிக்க இன்பத்தை அடைகிறான் என்னும் வடிவில் காமத்துப்பாலில் காதற்கதை நாடக முறையில் கவிதைச் சுவையுடனும் கற்பனைத் திறனுடனும் ஆணும் பெண்ணும் கூசாமல் படித்து அறிவுபெறும் முறையில் அமைந்திருக்கிறது.

களவியல் 7 அதிகாரங்களிலும், கற்பியல் 18 அதிகாரங்களிலும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். களவியல் முதல் அதிகாரமான தகையணங்குறுத்தல் என்னும் அதிகாரத்தில் தலைவன் தலைவியின் கண்ணழகையும் மார்பின் அழகையும் கண்டு,

"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு"

என்று தன் வியப்பைத் தெரிவிக்கின்றான். குறிப்பறிதல் என்னும் அடுத்த அதிகாரத்தில் தலைவனும் தலைவியும் ஒருவர் மற்றொருவரின் உள்ளக் குறிப்பை அறியும் வகை கூறப்படுகின்றது.

இருவரும் கூடி மகிழ்தலைப் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அடுத்த அதிகாரம் தெரிவிக்கின்றது. தலைவன்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்று தான் நுகர்ந்த இன்பத்தை நினைத்து மகிழ்கின்றான். நலம்புனைந்துரைத்தல் என்னும் அதிகாரத்தில் தலைமகன் காதலியின் அழகினைப் புனைந்து பாராட்டுகிறான். இவ்வதிகாரத்தில் தெய்வக் கவிஞர் வள்ளுவரின் கற்பனைச் சிறப்பைக் கண்டு மகிழ்கிறோம். இரவிலே காதலியைச் சந்தித்து அவளோடு இன்பம் நுகர்ந்து அவளைப் பாராட்டும் வகையில் காதலன் மதியை நோக்கி,

"மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி"

என்கின்றான். "என் காதலியின் முகத்தை ஒத்திருக்க வேண்டுமாயின் மதியே பலர் காணுமாறு தோன்றாதே" என்கிறான்.

தலைவன் மட்டும் தலைவியின் முகத்தைக் காணவேண்டும்; மற்ற வர்கள் அவள் முகத்தைக் காணவிடமாட்டான். அதுபோல மதியும் பலர் காணத் தோன்றக்கூடாதாம். எத்தகைய மான வுணர்ச்சி தலைவனிடம் காணப்படுகிறது என்று பாருங்கள். கல்லடிபட்டாலும் படலாம்; கண்ணடிபடக்கூடாது என்பது பழமொழியன்றோ? தன் காதலியின் முகம்போல இருக்க விரும்பி னல் அம்மதியும் பலர் கண்களுக்கு அடிபடக்கூடாதாம். காதற் சிறப்புரைத்தல் என்னும் அடுத்த அதிகாரத்தில் தலைமகன் தன் காதல் மிகுதி கூறலும் தலைமகள் தன் காதல் மிகுதி கூறலும் உள்ளன.

அடுதத அதிகாரமாகிய நாணுத்துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தில் தலைவனும் தலைவியும் காதல் மிகுதியால் தங்கள் நாணத்தின் எல்லையைக்கடந்து தோழியிடம் கூறும் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

களவியலின் இறுதியதிகாரமாகிய அலர் அறிவுறுத்தல் என்னும் அதிகாரத்தில் பிறர் கூறுகின்ற அலர் தனக்கு உதவி யாக இருப்பதாய்த் தலைமகன் தோழியிடம் கூறுதலும், தலைமக ளும், தோழியும் இவ்வலர் குறித்துத் தலைமகனிடம் சொல்லு தலும் குறிபபிடப்படுகின்றன.

இவ்வாறு 7 அதிகாரத்தில் காமத்துப்பாலின் களவிபற் பகுதி முடிகிறது.

## கற்பியல்

களவொழுக்கம் பற்றி 7 அதிகாரங்களில் சிறந்த கருத்துக் களைக் கூறிய வள்ளுவர், அடுத்த 18 அதிகாரங்களில் தலைவனை மணந்து நல்லறமாகிய இல்லறத்தை நடத்தும் தலைவி தன் தலை வன் பிரிவால் உணரும் உணர்ச்சிகளைத் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார் களவொழுக்கத்தைத் தொடர்ந்து நிகழும் உடன் போக்கு, திருமணம் இவற்றைப்பற்றிய குறிப்பு எதுவும் காமத் துப்பாலில் கூறப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது. பிரிவாற்றா மையிலிருந்து அவர்வயின் விதும்பல் வரை உள்ள 12 அதிகாரங் களிலும் வள்ளுவர் பிரிவுபற்றியே கூறியுள்ளதைக் காண்கிறோம் காரணம் காதலர் பிரிவிலேதான் அவர்களுடைய மனப்பான்மை

மிகுதியாக விளங்கும் என்பதுதான். மற்ற 6 அதிகாரங்களுள் அவர் 2 அதிகாரங்களைத் தலைவன் தலைவியர் கூடிமகிழ்தலைப் பற்றியும் 4 அதிகாரங்களை ஊடல் பற்றியும் அமைத்திருப்பதைக் காண்கிறோம். இக்கற்பியலில் வள்ளுவரது கற்பனைத்திறனை நன்கு கண்டு மகிழலாம். இக்கற்பியலைக் காணும்போது வள்ளுவர் ஒரு பெருங்காப்பியத்தை இயற்றியிருப்பாரானால் அஃது அப்படி இணையற்று விளங்கும் என்றுகூட நாம் கற்பனைசெய்து காணலாம்

இப்பன்னிரண்டு அதிகாரங்களில் முதலாவதாக இருப்பது பிரிவாற்றாமை என்னும் அதிகாரம்.

தலைவன் பிரியப்போவதாகத் தோழியிடம் குறிப்பிடுகிறான் அப்போது தோழி, அவனை நோக்கி,

"செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை"

என்று தான் வேறாகவும் தலைவி வேறாகவும் கருதாத நிலையில் கூறுகிறாள். தலைமகன் பிரிவு உணர்த்தியதை வந்து சொல்லிய தோழியிடம் தலைவியோ,

"இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு"

என்று கூறி உளம் நொந்துகொள்கிறாள். அடுத்த அதிகாரம் படர் மெலிந்து இரங்கல் என்பது. இதில் தலைவி பிரிவுத்துன்பத்தை நினைந்து மெலிந்து, தோழியிடம் கூறி வருந்துவதைக் காண்கி றோம். அடுத்தது கண் விதுப்பழிதல் என்னும் அதிகாரம். இது தலைவியின் கண்கள் பிரிந்த தலைவனைக் காண்டற்கு விரைந்து நிற்பதைக் கூறுகிறது.

தலைவன் பிரிவால் தலைவிக்குப் பசப்பென்னும் நிறவேறு பாடு தோன்றுவதைக் குறிப்பது பசப்புறு பருவரல் என்னும் அதிகாரம்.

அடுத்தது தனிப்படர் மிகுதி என்னும் அதிகாரம். இது தலைவிக்குத் தலைவன் பிரிவால் நிகழும் மிகுதியான துன்பத்தைக் குறிப்பது. தன்னிடம் ஏற்பட்ட துன்ப மிகுதியைத் தலைவி,

"ஒருதலையான் இன்னாது காமம்; காப்போல
இருதலை யானும் இனிது"

என்று தோழியிடம் தலைவன் பிரிவை நினைத்து வருந்துகிறாள்: கணவன் மனைவியாகிய இருவரிடத்தும் காவடிபோல அன்பு சமமாக இருந்தாற்றான் வாழ்வு இனிதாக இருக்கும். ஒருபக்கம் மட்டும் அன்புஇருந்தால் துன்பந்தான் தரும். இதைத்தான் தலைவி எடுத்துக்காட்டுகிறாள். காவடியைக் கூறியது மிகப் பொருத்தமான உவமை. நினைந்தவர் புலம்பல் என்னும் அதிகாரம் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்துவதைப் பற்றியது.

கனவு நிலை உரைத்தல் அதிகாரத்தில் தலைவி, இரவில்கண்ட கனவைத் தலைவன் அனுப்பிய தூது போலக்கருதித் தோழியிடம் அக்கனவினுக்கு எங்ஙனம் விருந்து செய்வேன்? என்கிறாள்.

மாலைப்பொழுது கண்டு தனிமை நினைத்துத் தலைவி வருந்துதலைக் கூறுவது பொழுதுகண்டிரங்கல் என்னும் அதிகாரம்.

அடுத்து உறுப்பு நலன்அழிதல் என்பதில் தலைவியின் கண், தோள், நெற்றி முதலிய உறுப்புக்கள் பிரிவுத் துயரால் அழகு இழந்து வாடுதல் கூறப்படுகிறது.

ஆற்றாமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத் தலைமகள் செய்வதறியாது தன் நெஞ்சொடு சொல்லிக் கொள்ளுதலைக் குறிப்பது நெஞ்சொடு கிளத்தல் அதிகாரம்.

துன்பத்தைத் தலைவி அடக்கிக்கொள்ள முயல்கிறாள். என்றாலும், காதல், மனத்துள் அடங்காது வாயால் வெளிவருவதைக் கூறுவது நிறையழிதல் அதிகாரமாகும்.

பிரிந்த தலைமகன் மீண்டும் வருவான் என்னும் நம்பிக்கையுடன் அவனது வரவைத் தலைவி காணத் துடிக்கும் நிலையை அவர்வயின் விதும்பல் என்னும் அதிகாரம் உரைக்கின்றது. சுருங்கக் கூறினால் தலைமகனைக் காணத் தலைமகள் விரைதல் எனலாம். இத்தலைப்புக்குப் பரிமேலழகர் விளக்கம் கூறுவது பொருத்தமாக இல்லை. தலைமகனைக் காணும் விருப்பத்தால் தலைமகள்,

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்"

என்றும்,

"காண்கமன் கொண்கனைக் கண்ணுர; கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு"

என்றும் சொல்கிருள். தலைவன் வினை முடிந்து திரும்புகிருன். தலைவன், தலைவி, தோழி ஆகிய இவர்கள் ஒருவர் குறிப்பினை ஒருவருக்கு அறிவுறுத்துகிருர்கள். இதுவே குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரமாகும். இதில் திரும்பிவந்த தலைவன் மறுபடியும் பிரிந்து போவான் என்று தலைவி குறிப்பாகக் காட்டலும் தலைவன், பிரிந்துபோதல் இல்லை என்பதைக் குறிப்பால் தெரிவித்தலும் தோழி தலைவிக்கு அறிவுறுத்தலும் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. அடுத்த அதிகாரமாகிய புணர்ச்சி விதும்பல் என்பது இருவரும் புணர்ச்சிக்கு விழைந்து விரைதல் பற்றியது.

தலைவி. தலைவனேடு ஊடிநிற்கிருள். தலைவன் இதுகுறித்துச் சொல்லுங்கால்,

"மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்"

என்னும் கருத்தைத் தலைவியிடம் தெரிவிக்கிருன். காமஇன்பம் மலரினும் மென்மையானது. அங்ஙனம் மென்மையானது என்பதை அறிந்து அதனை அடைபவர் உலகத்தில் சிலரே உளர். வற்புறுத்தி இன்பம் உறுவதில் இன்பம் கிடைப்பது அரிது. மலரைக் கசக்கி மோந்தால் மணம் வீசுமா? வீசாது. அதுபோலத் தான் காமஇன்பமும். இருவரும் உளம்ஒத்து நுகர்தற்குரியது இவ்வின்பம். இவ்வரிய கருத்தை வள்ளுவர் தலைமகன் வாயிலாக மக்களுக்கு உணர்த்துகிருர். இக்கருத்தை இல்லற வாழ்வில் ஈடுபட்டார் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அடுத்த அதிகாரம் நெஞ்சொடு புலத்தல் என்பது. இது தலைமகள் புலத்தலையும் தலைமகன் புலத்தலையும் கூறுகிறது. இதில் தலைவனும் தலைவியும் தங்கள் நெஞ்சத்தின் இயல்பை வெளிப்படுத்துகிருர்கள்.

புலவி, புலவி நுணுக்கம், ஊடல்வகை ஆகிய இறுதி மூன்று அதிகாரங்களில் ஊடும் திறன் கூறப்படுகிறது. ஊடல் என்பது தலைவன் தலைவிக்கு ஏற்படும் சிறுபிணக்கு. புலவி என்பது இளைய கலாம் ஆகும். துனி என்பது முதியகலாம் ஆகும். புலவி என்னும் அதிகாரத்தில் புலந்த தலைவியிடம் சென்ற தோழி அவளோடு நகையாடி, "நீ புலவி நீங்கி அவரை அடையாதே; அவர் துன்பப் படுவதைச் சிறிது காண்போம்" என்று குறிப்பாகக் கூறிப் பின்பு வெளிப்படையாக.

"உப்பமைந் தற்றால் புலவி; அது சிறிது
மிக்கற்றால் நீள விடல்"

என்று புலவி நீடிப்பது நன்றன்று எனக்குறிப்பிடுவதைக் காண்கிறோம். தலைவி ஊடல் நீங்காதிருப்பதைக் கண்டு தலைவன் உளம் நொந்து,

"நீரும் நிழலதே இனிது; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது"

என்று கூறுவதும் புலவி என்னும் அதிகாரத்தில் காணப்படுவது. இக்கருத்தை மனைவிமார்கள் நன்கு தெரிந்துகொள்ளவேண்டுவது. உயிருக்கு இன்றியமையாத நீரும் நிழலிடத்திருந்தால் குளிர்ச்சி மிகுந்து நீர்வேட்கையைத் தணிக்கும்; இனிதாகவும் இருக்கும். வெயிலிடத்துள்ள நீர் இனிதாக இருக்குமா? இராது அதுபோலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையாரிடத்தே இனிதாகும்; அன்பில்லாரிடத்து இனியதாய் இராது ஆதலால், புலவியை அவரிடத்து நிகழ்த்த வேண்டும் என்றும் மனைவிமார்கள் நன்கு தெரிந்திருத்தல்வேண்டும் என்பதை வள்ளுவர் தலைவன் வாயிலாக அறிவுறுத்துகிறார் என்றறிக. புலவி நுணுக்கத்தில் யாதொரு காரணமும் இல்லாமல் சில காரணங்களைக் கற்பித்துத் தலைவி தலைவனோடு புலத்தலைக் காண்கிறோம். இங்கு வள்ளுவர், பெண்ணை நுண்மாண் நுழை புலம் மிக்கவளாகக் காட்டியிருப்பதை நாம் கண்டு கண்டு மகிழலாம். "நீ எல்லாப் பெண்களும் நின்மார்பைக் காணுமாறு சென்றுவந்தாய். நான் அந்த மார்பைப் புல்லமாட்டேன்" என்று தலைவி கூறுகிறாள். இக்கருத்துடைய குறள் இது:

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்;
நண்ணேன் பரத்தநின் மார்பு"

பலரும் தலைவன் மார்பைப் பார்த்ததால் அவன் பரத்தனுய் விட்டானும். எப்படியிருக்கிறது தலையின் கற்பனை.

ஊடல் உவகை அதிகாரத்தில் காமத்திற்குக் கூடுவதை விட ஊடுதல் இன்பம் தரும் என்றும், ஊடலில் தோற்றவர் வென்றவர் ஆவார் என்றும் கூறி இறுதியாக,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்னும் குறளை அமைத்துக் காமத்துப்பாலை வள்ளுவர் முடித் துள்ளார்.

## காமத்தைப் பற்றிய கருத்துக்கள்

தெய்வப் புலவர் வள்ளுவர், என்றும் மாருத அறங்களை எடுத்துக்கூறும் நல்லாசிரியராகவும், வல்ல அரசியல் அறிஞ ராகவும், பயிர்த்தொழிலை நன்கறிந்த உழவுத்தொழில் வல்லுந ராகவும், நோய் தீர்க்கக்கூடிய மருத்துவப் புலவராகவும் இருப்பதோடல்லாது, காதலின் தன்மையினையும் காதலில் ஈடுபட்டோர் செய்யும் காதற் குறிப்புக்களையும் உணர்ந்து தெரிவிக்கும் காதற் கலைஞராகவும் இருப்பதைத் திருக்குறளில் கண்டு வியப்படைகிறோம். எத்துறைச் செலினும் அத்துறையில் வல்லுநராகவே காட்சியளிக்கிருர் வள்ளுவர். எல்லாம்வல்ல சித்தராக அவர் விளங்குவதனுற்றுன் பண்டைப் புலவர்கள் இவரைத் தெய்வப் புலவர் என்றுர்கள். காமத்துப்பாலில் காதலின் தன்மைகளையும் வன்மைகளையும் காதலர்கள் காட்டும் குறிப்பு முறைகளையும் நுனித்தறிந்து உண்மைக்கு மாறுபடாது எடுத்துக்காட்டியிருப்பதைக் காணுங்கால் வள்ளுவர் இளமைப் பருவத்தில் காதல்செய்துதான் ஒருத்தியை மணந்திருத்தல் வேண்டும் என்று உறுதியாய்க் கூறலாம்போல் தோன்றுகிறது. அவர் காதலைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைக் குறளில் கண்டு களியுங்கள்.

## கவிதைச்சுவை

காமத்துப்பாலில் கவிதைச்சுவை குவிந்துகிடக்கிறது. தேன்குழலை எப்பக்கத்தைக் கடித்துத்தின்றாலும் இனிக்கும். அதுபோலக்காமத்துப்பாலும் எப்பக்கத்தைப் புரட்டிப் படித்தாலும் பெரும்பாலும் ஒருவர், கவிதைச் சுவையைக் கண்டு சுவைக்காமல் இருத்தல் இயலாது. கவிதை என்றால் என்ன என்று முதலில் பார்ப்போம் கடவுளை விளக்கமுடியாததுபோலக் கவிதையை விளக்க முடியாதெனினும் அதனை ஒருவாறு விளக்கலாம். ''கற்பனை வெளியீடே கவிதை'' என்றார் ஆங்கிலக் கவிஞர் செல்லி. ''முன் சிந்தித்த சிந்தனைகளைப் பின்பு நினைவுக்குக் கொண்டுவந்து அமைதியான நிலையில் படைத்துக் கொடுப்பது கவிதை'' என்றார். இயற்கையைப்பற்றி எண்ணற்ற பாடல்களைப் பாடிக் குவித்த ஆங்கில எழிற்கவிஞர் ஒர்ட்ஸ்வொர்த். ஆங்கில மேதை மேத்யூ ஆர்னல்டு, ''முற்றுப்பெற்ற வடிவத்தில் மகிழ்ச்சி தோன்ற வெளியிடுவது கற்றற்குரிய கவிதை'' என்றார். ஜான்சன் என்பார், ''இன்னேசை கூடிய அழகின் படைப்பே இனிய கவிதை'' என்றார். தேசியக் கவிஞர் பாரதியாரோ, ''பாட்டினிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இவை இருத்தல் வேண்டும்'' என்றார். சுருங்கச்சொன்னால் கருத்தாலும் கற்பனையாலும் உவமையாலும் சொல்லின்பத்தாலும் மேலும் மேலும் படித்தின்புறவேண்டும் என்னும் வகையில் வல்லோரால் அமைதி பெறச் செய்வது கவிதை என்று கூறலாம் இங்குக்கூறிய அத்தனை தன்மைகளும் உள்ள பல கவிதைகளைக் காமத்துப்பாலில் கண்டு கண்டு இன்புறலாம்.

## காமத்துப்பால் அளிக்கும் பொதுச்செய்தி

இறுதியாகக் காமத்துப்பால் மக்களுக்குக் கூறும் செய்தியாதென்று காண்போம. வள்ளுவர் வாழ்வில் நம்பிக்கையுள்ளவர்; வாழ்வாவது மாயம் நாளை மண்ணாவது திண்ணம் என்றுமட்டும் கூறவில்லை. வாழ்வாங்கு வாழ்ந்து மேலுலக வாழ்வுக்கும் வழிதேட வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. உடம்பை நல்ல உணவால் பேணுவதற்கு வள்ளுவர், மருந்து என்னும் அதிகாரத்தில் 'அற்றால் அளவறிந்துண்க; அஃது உடம்பு பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு'' என்று வழிகூறி

யிருப்பதைக் காண்க. வள்ளுவர் பெண்ணை வெறுக்கவில்லை; கற்புள்ள பெண்ணினும் பெறற்கரிய பொருள் வேறு இல்லை என்றார். அவர் பெண்ணைத் துறந்து வாழச்சொல்லவில்லை; மாதை மணந்து அன்புடன் வாழ்ந்து மக்களைப் பெற்று நன்முறையில் இன்பம் துய்க்கக் கூறியுள்ளார். காமத்துப்பாலில் எப்படி கணவனும் மனைவியும் வாழவேண்டும் என்பதை அவர் குறிப்பாகக் காட்டியிருப்பதைக் காண்கிறோம். காமத்துப்பாலில் நாயனார் புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்தை வைத்துப் பெண்ணின் கற்பனைத் திறத்தைவிளக்கும் முகத்தான் அவளது நுண்ணிய அறிவின் திறனை எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது; பிரிவுப் பகுதியை வைத்துப் பெண்ணுக்குக் கணவனிடம் இருக்கவேண்டிய அன்பின் திறத்தை உண்மையாக விளக்கியுள்ளார்: இருவரிடமும் ஒத்த அன்பு இருந்தாற்றான் காதலின்பம் சிறந்துவிளங்கும் என்பதையும், மனைவி ஊடலில் எல்லை கடந்து போதல் கூடாது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவர் சங்க இலக்கியங்கள் இடங்கொடுத்துள்ள பரத்தையிற் பிரிவைக் காமத்துப்பாலில் சொல்லாது, கணவன் வழுக்கிவிழாது வாழ வேண்டுமென்று குறிப்பாகக் காட்டியிருப்பதும் நம் உள்ளத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## முடிவுரை

காமத்துப்பாலில் செய்வப்புலவர் வள்ளுவர் கலைஞராகவும் கவிஞராகவும் நின்று மென்மையான காதல் ஒழுக்கத்தைப் புன்மைவழியில்பாலுணர்ச்சியைத் தூண்டும் வகையில் அமைக்காது ,நாடகப்பாங்கில் உளத்தியல் பல உண்மைகளை விளக்கித் தூய்மையோடு எழுதியிருப்பதால், ஆண்களும் பெண்களும் இதனைச் சிறிது முயன்று படித்துக் காதல்வாழ்வு குறித்து நல்லறிவுபெறுவார்களாக!

வாழ்க வள்ளுவம்! வளர்க குறள்நெறி!

——][——

# தீதும் நன்றும் பிறர்தர வாரா

—*—

திரு. மா. செல்லப்பெருமாள்,

மதுரை.

மனிதன் ஆறறிவுடையவன். நன்மை இவையென்றும் தீமையிவை என்றும் பகுத்தறியக்கூடிய ஆற்றல் வாய்ந்தவன். பிறருக்கு நன்மை விளைவிக்கவோ தீமை விளைவிக்கவோ அவனுல் இயலும். அங்ஙனமே தனக்கும் நன்மையைத் தேடவோ, தீமையைத் தேடவோ அவனுக்கு இயலும் அவனுடைய அறிவை எவ்வாறு பயன்படுத்துகின்ருனே அதற்கேற்பப் பயனும் அமையும்.

" நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் "

என்ற ஆன்ருேர் கருத்துக்கிணங்க ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய எண்ணங்களினுல் கட்டுப்பட்டிருக்கிருன்; ஆனுல் அவன் எண்ணங்களின் எல்லையைப் படிப்படியே விரிவாக்கவும் அவனுல் இயலும். அவன் தன்மனஉலகினை விரிவாக்கவும் மேன்மையாக்கவும் அவனுல் இயலும். அவன் தாழ்ந்த நிலையினின்று உயர்ந்த நிலைக்கு ஏறலாம். அவன் இருளும், வெறுப்புமுள்ள எண்ணங்களுக்கு இடங்கொடாமல் சீரும் சிறப்புமுள்ள எண்ணங்களைத் தனக்கு இயல்பாகக் கொள்ளலாம். இங்ஙனம் செய்வதிலிருந்து அவன் உயர்நிலையை யடைந்து மாட்சிமையும் முழுமையுமுள்ள உலகையறிந்தவனுவான். ஏனெனில், மனிதர் தத்தம் எண்ணங்களின் தன்மைக்கு ஏற்ப உயர்ந்த அல்லது தாழ்ந்த மனேஉலகங்களில் வாழ்கிருர்கள் அவர்கள் உலகினைத் தவருய வழியில் நோக்கும்போது இருளாயும் துன்பம் நிறைந்ததாயும் இருப்பதேபோன்று விரிந்த அறிவுடன் நோக்கும் அளவிற்

கேற்பச் சிறந்ததாகவும் விரிவாகவும் இன்பம் நிறைந்ததாகவும் இருக்கின்றது. அவர்களைச் சூழ்ந்துள்ள ஒவ்வொன்றும் அவர்களுடைய எண்ணங்களின் வண்ணங்களால் தோய்க்கப் பட்டிருக்கிறது.

பொருமை, ஆசை, கோபம், கொடுஞ்சொல் முதலியவைகளை இயல்பாகக் கொண்ட மனதுடைய மனிதனைப்பற்றி ஆராய்வோம். அவனுக்கு ஒவ்வொன்றும் அற்பமாயும் துன்பமுள்ளதாயும் தோன்றுகிறது. தன்னில் மேன்மை யில்லாததால் வேறு எந்தஇடத்திலும் மேன்மையைக் காண்கிறானில்லை. தான் இழிவான வனாக இருப்பதால் ஏனைய எவரிடத்தும் மேன்மையைப் பார்க்கச் சக்தியற்றவனாகிறான். ஏனைய ஆண்களையும் பெண்களையும் தன்னைப்போல அற்பமானவர்களாகவும் சுயநலமுடையவர்களாகவும் தீர்மானிக்கிறான். சுயநலமற்ற சிறந்த காரியங்களிலுங்கூட அற்பமான இழிவான கருத்தே கொள்கிறான்.

பொருமை, ஆசை, கோபம், கொடுஞ்செயல் ஆகியவற்றை இயல்பாகக் கொள்ளாத தூய பெருந்தகைமையான மனதுடைய மனிதனைப்பற்றி ஆராய்வோம். அவனுடையஉலகம் மேன்மையும், அழகும், இன்பமும் நிறைந்ததாயிருக்கிறது. எல்லா உயிர்களிடத்தும் ஒருவித மேன்மையிருப்பதாக உணருகிறான். அவன் மனிதரை உண்மையுள்ளவர்களாகக் காண்கிறான். அவர்களும் அவனிடத்து உண்மையுடையோராகவே இருந்துவருகிறார்கள். அவன்முன் அற்பர்களும் தங்கள் இயல்பை மறந்து மேன்மையும் இன்பமும் நிறைந்த வாழ்வின் ஒளியையே காண்கின்றனர். முற்கூறிய மனிதனும் பிற்கூறிய மனிதனும் அடுத்தடுத்து நெருங்கியிருப்பவரேயாயினும் இரு வேறுபட்ட மனோ உலகங்களில் வாழ்பவரேயாவர் அவ்விருபேருடைய அறிவும் முற்றிலும் மாறுபாடுடைய ஆதாரத்தையே தழுவுகிறது அவரின் செயல்கள் ஒன்றிற்கொன்று முரண்பாடுடையனவாகவே இருக்கின்றன. அவர்களின் ஒழுக்கத்தின் உள்நோக்கம் ஒன்றிற்கொன்று எதிரிடையாகவே இருக்கிறது. ஒருமனோநிலை அதற்குரிய கீழ்மையையே நாடுகிறது. மற்றொன்றோ அதற்குரிய

மேன்மையையே நாடுகிறது. ஒருவனுக்கு உலகம் திருடர்கள் நிறைந்த குடிசையாகக் காட்சியளிக்கிறது. மற்றவனுக்கு உலகம் உயர்ந்தோர் வாழும் மாளிகையாகக் காட்சியளிக்கிறது. எல்லா மனிதர்களும்தங்கள்மனோநிலைக்கு ஏற்பப் பிரதிபிம்பிக்கும் நிலைக்கண்ணுடியாயிருக்கிறார்கள். அவர்கள் உலகைக் காணும் போது தங்களுடைய சுயபிரதிபிம்பத்தையே திரும்பக் காண்பிக்கின்ற ஒரு நிலைக்கண்ணுடியையே உற்று நோக்குவோராகின்றனர்.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த எண்ணங்களின் குறுகிய அல்லது விரிவான எல்லைக்குள் இயங்குகிறான். அந்த எல்லைக்குப் புறம்பாக உள்ளவைகள் அதுபோது அவனுக்குத் தோன்றுவதில்லை. அவன் எந்த அளவு எண்ணத்தில் தன்னைப் பக்குவமாக்கிக்கொண்டிருக்கிறானே அந்த அளவுதான் அவனுக்குத் தெரிகிறது. ஒருவனுடைய மனோநிலையின் எல்லை எவ்வளவுக்கெவ்வளவு குறுகியிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த எல்லைக்கு அப்பால் அளவு இல்லையென்றும், வேறு உயர்வு இல்லையென்றும் எண்ணிக்கொள்கிறான். குறைவு, நிறைவை அடக்கிக்கொள்ள முடியாது. அவனுக்கு விரிவான மனத்தையடைய வழிவகை தெரியவில்லை. இவ்விதம் கிரகிக்கும் அறிவு படிப்படியாகத்தான் வளர்ந்துவரும். எண்ணத்தின் மிக விரிவான எல்லையில் வாழ்கிற மனிதன், தான் வெளியேறிவந்து, தான் விட்டகன்ற குறுகிய எல்லைகளைப் பற்றியெல்லாம் அறிகிறான். ஏனெனில், நிறைந்த அனுபவத்தில் குறைந்த அனுபவங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. அவனுடைய எல்லையானது விரிவாகி, முழுமையான மனிதத் தன்மையின் எல்லையை நெருங்கும்போது' அவன் குற்றமற்ற ஒழுக்கமும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் உள்ளவர்களுடன் நெருங்கி அளவளாவத் தன்னைப்பக்குவப்படுத்திக் கொண்டுவிடுகிறான். அவன் அதுவரையில் அற்பமாயுணர்ந்த அல்லது முற்றிலும் அறியாதிருந்த மிக விரிவான எல்லைகள் இன்னும் அப்பால் இருக்கின்றனவென்று அவன் உணரத்தக்க போதிய அறிவினைப் பெறுகிறான்.

'மனம்' என்பதும் 'நினைப்பு' என்பதும் ஒரே பொருளைக் கொடுக்கும் சொற்கள். மனிதனுடைய அகத்துள் மறைந்து

கிடக்கும்நினைப்பினின்றே அவனது ஒவ்வொரு செயலும் உண்டாகிறது. வித்து இல்லாமல் மரம் உண்டாதல் இல்லை; அதுபோல, நினைப்புஇல்லாமல் செயல் உண்டாதல் இல்லை. மனதாரச் செய்கின்ற செயல்களைப் போலவே, தாமேயாகவும், சுபாவமாகவும் நிகழ்கின்ற செயல்களும் நினைப்பினின்றே உண்டாகின்றன.

மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலேதான் .நினைப்பாகிய உலைக்களத்தில் சில கொலைக் கருவிகளைச்செய்து அவற்ருல் தன்னை அழித்துக் கொள்கிருன்; அவ்வுலைக் களத்திற்ருனே சில கருவிகளைச் செய்து, அவற்ருல் வலிமை, மகிழ்ச்சி, அமைதி என்னும் சிறந்த அரண்களைத் தனக்குள் கட்டிக் கொள்கிருன். மனிதன் நல்ல நினைப்புக்களைக் கைக்கொண்டு நல்ல வழிகளில் செலுத்துவதனுல் தெய்வத்தன்மை அடைகிருன். கெட்ட நினைப்புக்களைக் கைக்கொண்டு கெட்ட வழிகளில் செலுத்துவதனுல் மிருகத்தன்மையடைகிருன். ஆகவேஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்ற நிலைமைகள் அவனது மனத்தின்கண்ணுள்ள நேர்மையின்மையின் பயன்களே; அத்துன்ப நிலை அவனுக்குப் பிறரால் தரப்படுவதன்று.

ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுக்கின்ற நிலைமைகள் அவன் மனத்தின்கண்ணுள்ள நேர்மையின் பயன்களே; அவ்வின்ப நிலை அவனுக்குப் பிறரால் தரப்படுவதன்று. எனவே நல்ல நினைப்பின் அளவு கருவி இன்பம் அனுபவித்தலே என்பதையும் கெட்ட நினைப்பின் அளவுகருவி துன்பம் அநுபவித்தலே என்பதையும் நன்கு உணர்ந்து மனத்தை உயர்ந்தோர் காட்டிய உயர் நெறியின் கண்ணே செலுத்திப் பண்படுத்திப் பயன் பெற்றுய்வோமாக.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (குறள்)

—oo—

சங்கச் செய்திகள் :

# மதுரைத் தமிழ்ச் சங்கப் ‘புலவர்’ தேர்வு பற்றிய அரசாணை

இம்மதுரைத் தமிழ்ச் சங்கம், ஆண்டுதோறும் ‘புலவர்’ தேர்வு நடத்திவருவதை அனைவரும் நன்கறிவர். “இத்தேர்வு எழுதி வெற்றிபெற்றோர், உயர் தொடக்கப்பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணி புரியலாம்” என்று தமிழக அரசு, தம் G. O. Ms. No. 625 Education dated 28—4—1966 வழியாக ஆணை பிறப்பித்திருந்தது. இப்போது புலவர் தேர்வெழுதி வெற்றிபெற்றோர் உயர்நிலைப் பள்ளிகளிலும் பணி புரிவதற் கேற்றவாறு, தம் அரசாணையை மாற்றி அமைத்துள்ளமை பாராட்டுக்குரியது. (Memorandum No. 93226/B2/66-1, Education dated, 24—9—66)

இவ்விரு அரசாணைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Copy of
Proceedings of the Director of Secondary Education,
Madras-6.

Rc. No. 108301 B 7 / 65 Dated 5th May, 1966.
GOVERNMENT OF MADRAS
EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT
G. O. Ms. No. 625, Education, Dt. 28th April, 66

ABSTRACT.

Elementary Education—Pulavar (Panditham) Certificates issued by the Madurai Tamil Sangam—Declared equivalent to the Pandit's Examination held by the Tamil Sangam.

Read :

From the Director of Secondary Education,
Rc. No. 108301 / B 9 / 65 dt. 8—12—65
From the Director of Secondary Education,
Rc. No. 108301 / B 7 / 65 dt. 30—3—66

ORDER :

The Government accept the recommendation of the Director of Secondary Education that the Pulavar (Panditham) Certificates issued by the Madurai Tamil Sangam be considered equivalent to the Pandit's Examination Certificate mentioned in Rule 13 of the Madras Educational Rules for the purpose of appointment of Tamil Pandits in **HigherElementary Schools** subject to the condition that the holders of Pulavar (Pandithami) Certificate should not be confirmed in service unless they have successfully undergone the training course conducted by the Annamalai Univesity.

The Director of Secondary Education is requested to submit necessary draft amendments to the Madras Educational Rules in due course.

/ By Order of the Governor /

(True copy)

J. ANJANI DAYANAND
Deputy Secretary to Government.

/ copy / communicated.

2. These Pandits who are appointed in Higher Elementary Schools with reference to rules and orders in the matter are eligible for the minimum in the time scale of pay applicable to secondary grade teachers i. e. Rs. 90/- per mensem.

(Sd.) S. V. CHITTIBABU
for Director of Secondary Education.

/ True Copy /

GOVERNMENT OF MADRAS.

EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT.

Memorandum No. 93226/B2/66-1, Education dated, 24-9-66.

Sub: Elementary Education appointment of Tamil Pandits with Pulavar (Pandhitham) Certificate issued by the Madurai Tamil Sangam declared equivalent to the Pandits examination mentioned in note to rule 13 of the Madras Educational Rules-Revised Orders Issued.

Ref: G. O. Ms. No. 625 Education dated 28—4—1966 from the Director of Secondary Education, Madras Rc. No. 60081/G2.10/65 dated 22—6—1966.

In the circumstances stated by the Director of Secondary Education in his letter cited the Government direct that the words **"in Higher Elementary Schools"** occuring in para 1 of the G. O. cited may by deleted.

(Sd.) N. ABDUR RAHIM

Assistant Secretary to Government.

/ True copy /

(copy) Communicated in continuation of the Director's Proceedings Rc. No. 108301/B7/65, dated, 5-5-1966.

(Sd.) K. MOHANARANGAM,

for Director of Secondary Education

Madras.

/ True copy /

——][——

# அஞ்சல் வழிப் பயிற்றுதல் (Postal Tution)

இவ்வாண்டு முதல் (1967—68) தமிழ்ச் சங்கத்து நுழைவு, இளம்புலவர் தேர்வுகட்கும், பல்கலைக்கழக நுழைவு, முதனிலைத் தேர்வுகட்கும், அஞ்சல்வழியில் பயிற்றும் முறை தொடங்கப்பட்டுள்ளது.

நுழைவுத் தேர்வுக்கு ஓராண்டுப் பயிற்சிக் கட்டணம் ரூ. 50-00

இளம் புலவர் தேர்வுக்கு ஈராண்டுப் பயிற்சிக்கட்டணம்ரூ.100-0 0

முழுவிவரங்களை மேலாளர், அஞ்சற்பாடப்பிரிவு
அஞ்சற் பெட்டி எண்:-215,
தமிழ்ச் சங்கம், மதுரை-1

என்ற முகவரிக்கு 25 காசு அஞ்சல்தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## மாநில முதற்பரிசு

1967-பிப்ரவரியில் பள்ளியிறுதி வகுப்பு மாணவர்க்கென இத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் தமிழகத்தில் முதன்மையாகத் தேறிய மாணவர், செல்வன்

பொ. செல்வராசுபாண்டியன்,

(பதினோராம் வகுப்பு, திரு S. R. நாயுடு அரசினர் உயர்பள்ளி, சின்னக்காமன்பட்டி, இராமநாதபுர மாவட்டம்) ஆவர். அவருக்கு இச் சங்கத்தாரின் மனங்கனிந்த பாராட்டும் வாழ்த்தும் உரியனவாம்.



---

## செந்தமிழ்க் கல்லூரி

இச்சங்கச் சார்பில் நடைபெறும் செந்தமிழ்க் கல்லூரி, கோடை விடுமுறைக்குப்பின், சூலைத் திங்கள் 15-ஆம் நாள் திறக்கப்பெற்றது.